# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

பாடம் 1

## வேதாகம வியாக்கியானவியல் அறிமுகம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ........ 1**

**துறைச்சொல் ........ 2**

**வேதாகம வியாக்கியானம் ........ 2**

**வியாக்கியான செயல்முறைகள் ........ 4**

ஆயத்தம் ........ 4

ஆராய்ச்சி ........ 5

பிரயோகம் ........ 6

**அறிவியல் வியாக்கியான இயல் ........ 7**

**வேத மூலங்கள் ........ 8**

**உதாரணங்கள் ........ 9**

**முன்னுரிமைகள் ........ 13**

ஆயத்தம் ........ 13

ஆராய்ச்சி ........ 14

பிரயோகம் ........ 15

*பக்தியுடைய* **வியாக்கியான இயல் ........ 17**

**வேத மூலங்கள் ........ 18**

**உதாரணங்கள் ........ 20**

**முன்னுரிமைகள் ........ 24**

ஆயத்தம் ........ 25

ஆராய்ச்சி ........ 27

பிரயோகம் ........ 29

**முடிவுரை ........ 31**




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

பெரும்பாலும் சிறு குழந்தைகள் தங்களுக்கு உண்மையில் தெரிந்திருப்பதை விட நிறைய தெரியும் என்று நினைக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அவர்கள் தங்கள் அம்மா சமைப்பதைப் பார்த்து, கொஞ்சம் உதவி செய்வார்கள், ஆனால் அவர்கள் சொந்தமாகவே சமைக்கத் தெரியும் என்று கருதுகிறார்கள். அவர்கள் தங்கள் தந்தையர் வேலையைச் செய்வதைப் பார்க்கிறார்கள், அவர்கள் ஒன்று அல்லது இரண்டு முறை அதை செய்து விளையாடுகிறார்கள், மேலும் தங்கள் தந்தைகளுக்குத் தெரிந்த அனைத்தும் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒரு கட்டத்தில், குழந்தைகள் பொதுவாக அவர்கள் கற்பனை செய்ததை விட நிறைய கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் கண்டுபிடிப்பார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, வேதாகமத்தை வியாக்கியானம் செய்வது போன்ற முக்கியமான விஷயத்திற்கு வரும்போது கூட பெரியவர்கள் பெரும்பாலும் அதே தவறைச் செய்கிறார்கள். நம்மில் பெரும்பாலானோர் நமது வேதாகமத்தை தவறாமல் வாசிக்கிறோம்; நம்மில் சிலர் பல ஆண்டுகளாக இதைச் செய்கிறோம். எனவே, வேதாகமத்தை வியாக்கியானம் செய்வது பற்றி நமக்கு போதுமான அளவு தெரியும் என்று நாம் அடிக்கடி கருதுகிறோம். ஆனால் வேதாகம வியாக்கியானம் என்பது உண்மையில் இருப்பதை விட மிகவும் எளிமையானதாகத் தோன்றக்கூடிய விஷயங்களில் ஒன்றாகும். வேதத்தை வியாக்கியானம் செய்வது எதைக் குறிக்கிறது என்பதைக் கவனமாக சிந்திக்க நாம் நேரம் ஒதுக்கும்போது, நாம் கற்பனை செய்ததை விட நிறைய கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

*வியாக்கியானம் செய்வதன் அடிப்படைகள்* என்பது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்* என்கிற நமது தொடரின் முதல் பாடம் ஆகும். இந்தத் தொடரில், வேதாகம வியாக்கியானத்தில் பல முக்கியமான கண்ணோட்டங்களை ஆராய்வோம் மற்றும் வேதத்தைப் புரிந்துகொள்வதற்கான நமது திறனை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வோம். இந்தப் பாடத்திற்கு "வேதாகம வியாக்கியான இயல் அறிமுகம்" என்று தலைப்பிட்டுள்ளோம். இந்த பாடம் வலுவான மற்றும் அறிவார்ந்த வேதாகம வியாக்கியானத்திற்கான அடிப்படை கட்டமைப்பை அறிமுகப்படுத்தும்.

வேதாகம வியாக்கியான இயல் பற்றிய நமது அறிமுகம் மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், சில முக்கியமான சொற்களை




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிமுகப்படுத்துவதன் மூலம் நமது பாடத்திற்கு ஒரு நோக்குநிலையைப் பெறுவோம். இரண்டாவதாக, வேதத்தின் அறிவார்ந்த வியாக்கியானத்தை விவரிக்கும் வியாக்கியான இயலுக்கான "அறிவியல்" அணுகுமுறைகளை ஆராய்வோம். மூன்றாவதாக, பாரம்பரிய கல்வி அணுகுமுறைகளுடன் இணைந்து பக்தியான வியாக்கியான முறைகளைப் பயன்படுத்துவதன் மதிப்பைப் பார்ப்போம். சில முக்கியமான சொற்களை முதலில் பார்ப்போம்.

# துறைச்சொல்

முக்கிய சொற்களை தவறாகப் புரிந்துகொள்வது எந்தவொரு விவாதத்திலும் குழப்பத்திற்கு ஒரு பெரிய ஆதாரமாக இருக்கலாம். எனவே நமது ஆய்வுக்கு பல சொற்களை அறிமுகப்படுத்துவோம். முதலில், வேதாகம வியாக்கியானம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, நாம் மூன்று வியாக்கியான செயல்முறைகளைப் பார்ப்போம். முதலில் வேதாகம வியாக்கியானம் என்ற கருத்தாக்கத்தைப் பார்ப்போம்.

## வேதாகம வியாக்கியானம்

"வியாக்கியான இயல்" என்பது இறையியல் மற்றும் வேதாகம ஆய்வுகளில் ஒரு பொதுவான சொல்லாகும், ஆனால் நாம் அதை நம் அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி பயன்படுத்துவதில்லை. வியாக்கியான இயல் என்று பொருள் தரக்கூடிய "வியாக்கியானவியல்" என்ற தமிழ் சொல் கிரேக்க சொற்களின் குடும்பத்திலிருந்து உருவானது என்பதை நம்மில் பலர் கவனிப்போம், இதில் தேவர்களின் புராண தூதரான "ஹெர்மிஸ்" என்ற பெயர் அடங்கும். இந்த சொல் *ஹெர்மெனுவோ* என்ற தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட வினைச்சொல்லுடன் தொடர்புடைய கிரேக்க சொற்களின் குடும்பத்திலிருந்து உருவானது, இதன் பொருள் "வியாக்கியானம் செய்தல்" அல்லது "விளக்குதல்" ஆகும். எனவே, பரந்த அளவில் நாம் வியாக்கியான இயலைக் குறிப்பிடும்போது, ஒரு செய்தி அல்லது தகவல்தொடர்பின் வியாக்கியானம் அல்லது விளக்கத்தை மனதில் வைத்திருக்கிறோம்.

1768 முதல் 1834 வரை வாழ்ந்த பிரெடெரிக் ஷ்லீயர்மாச்சர் பெரும்பாலும் நவீன வியாக்கியான இயலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். 1819 ஆம் ஆண்டில் அனைத்து இலக்கியங்களையும் புரிந்துகொள்வதற்கான ஒரு ஒருங்கிணைந்த கோட்பாடான "பொது வியாக்கியான இயல்" தேவை என்று அவர் பேசினார். வெவ்வேறு பாடங்களை அவற்றின் சொந்த சிறப்பு

வியாக்கியான இயல் மூலம் அணுக வேண்டும் என்பதை அவர் ஒப்புக்கொண்டார், ஆனால் அனைத்து வியாக்கியான முறைகளும் ஒரு பொதுவான வியாக்கியான முறையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், பல ஆய்வுத் துறைகளில் வியாக்கியான செயல்முறைகள் ஒரு முக்கிய அம்சமாக மாறியதால், முன்னணி அறிஞர்கள் பொதுவான வியாக்கியான இயலின் தேவையைக் கண்டனர். இன்று மெய்யியல், இலக்கியம், கலை ஆகிய துறைகளில் வியாக்கியான விவாதங்கள் தோன்றுகின்றன. உளவியல், சமூகவியல் மற்றும் இயற்பியல் மற்றும் உயிரியல் போன்ற துறைகளிலும் வியாக்கியான இயல் பயனுள்ளதாக இருக்கும். இந்தத் துறைகளில் பல முன்னணி நபர்கள் தாங்கள் ஆய்வு செய்யும் காரியங்களின் அர்த்தத்தை விளக்குவதில் தங்கள் துறைகள் எவ்வளவு சம்பந்தப்பட்டுள்ளன என்பதைப் பற்றி அதிகம் அறிந்திருப்பதால் இந்த விரிவாக்கம் நிகழ்ந்துள்ளது.

இந்தப் பாடத்தின் தலைப்பு குறிப்பிடுவது போல, வேதாகமத்தின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குவதற்கான ஆய்வான வேதாகம வியாக்கியான இயலில் நாங்கள் முதன்மையாக ஆர்வமாக இருக்கிறோம். நீங்கள் எப்போதாவது வேதாகமத்தைப் படித்திருந்தால், நீங்கள் குறைந்தபட்சம் முறைசாரா முறையில் வேதாகம வியாக்கியான இயலில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பீர்கள். வேதத்தைப் பற்றிய முறைசாரா அணுகுமுறைகள் மிகுந்த மதிப்புடையவையாகும், மேலும் இந்த பாடங்கள் நம்மில் பெரும்பாலானோர் ஏற்கனவே புரிந்துகொண்டதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஆனால் நாம் முறைசாரா வியாக்கியான இயலுக்கு அப்பால் சென்று, வேதாகமத்தின் கல்வி, அறிவார்ந்த வியாக்கியானத்தில் முன்னணிக்கு செல்லும் பிரச்சனைகளின் வகைகளை ஆராய்வோம்.

> பொதுவான வியாக்கியானவியல் மற்றும் வேத வியாக்கியானவியல் ஆகியவற்றுக்கு இடையே ஒரு வேறுபாட்டையும் ஒப்பீட்டையும் செய்வது உதவியாக இருக்கும். ஒரு வினைச்சொல் என்ன செய்கிறது என்ற கருத்துக்கள் வேதாகமத்திற்கும் பொதுவான வியாக்கியானவியலுக்கும் பொதுவானவையாக உள்ளன. சொல் வகையினம் யாவை? இலக்கணம், சொற்றொடர் அமைப்பு என்றால் என்ன? ஒரு எழுத்தாளர் அந்த வார்த்தைகளை எழுதும்போது அவர் எதைக் குறிக்கிறார் என்பதை நாம் எவ்வாறு தீர்மானிப்பது? ஆனால் வேதாகம வியாக்கியானவியலுக்கு குறிப்பிட்ட விதிகள் உள்ளன,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஏனென்றால் வேதம் அதை தேவனுடைய வார்த்தை என்று கூறுகிறது, எனவே, அது அதிகாரப்பூர்வமானதாகவும் அது தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறதாயும் இருக்கிறது. தேவன் ஒருவராகவும் சத்தியமாகவும் இருப்பதால், வேதத்தில் ஒருபோதும் முரண்பாடு இல்லை. எனவே, வேதாகம வியாக்கியானவியலின் தனித்துவமான ஒரு குறிப்பிட்ட அம்சம் என்னவென்றால், வேதாகமத்தின் அனைத்து தரவுகளும் ஒன்றுக்கொன்று முரண்படவில்லை என்ற அனுமானத்தின் கீழ் ஒன்றாக தொடர்புபடுத்த முயற்சிக்கிறோம், மாறாக அவை தேவனுடைய வெளிப்பாட்டின் பன்முகத்தன்மையைப் பற்றி பேசி அவை ஒன்றுக்கொன்று உடன்படுகின்றன.
>
> – Rev. மைக் குளோடோ

வேதாகம வியாக்கியானவியல் என்றால் நாம் எதைக் குறிக்கிறோம் என்பதை மனதில் கொண்டு, நாம் இரண்டாவது முக்கியமான வார்த்தையான வியாக்கியான செயல்முறைகளுக்கு திரும்ப வேண்டும். வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது நாம் பின்பற்றும் முக்கிய நடைமுறைகள் இவைகளாகும்.

## வியாக்கியான செயல்முறைகள்

இந்த தொடர் முழுவதும், நாம் மூன்று முக்கிய வியாக்கியான செயல்முறைகளான ஆயத்தம், ஆராய்ச்சி மற்றும் பயன்பாடு ஆகியன பற்றி பேசுவோம். இந்த செயல்முறைகள் வேத வியாக்கியானத்திற்கு மிகவும் இன்றியமையாதவை, இந்த தொடரின் ஒவ்வொரு பாடமும் இந்த மூன்று வகைகளில் ஒன்றாகும். முதலாவது ஆயத்தத்தைப் பற்றிப் பார்ப்போம்.

### ஆயத்தம்

வேதாகமத்தின் ஒரு பகுதியை நாம் வியாக்கியானம் செய்யத் தொடங்குவதற்கு முன்பு, ஆயத்த செயல்முறை நடைபெறுகிறது. நிச்சயமாக, வேதத்தை மீண்டும் மீண்டும் வாசிப்பதாலும் படிப்பதாலும் நாம் மீண்டும் மீண்டும் தயாராகிறோம் என்பதே இதன் பொருள். மிக முக்கியமான அர்த்தத்தில், ஆயத்தம் என்பது தவிர்க்க முடியாததாகும், ஏனென்றால் யாரும் ஒன்றும் தெரியாமல் வேதத்திற்குள் வருவதில்லை. நாம் அனைவரும் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளின் வகைப்படுத்தலால் தாக்கத்திற்குள்ளான

வேதாகமத்தை அணுகுகிறோம். நாம் அதை உணர்கிறோமோ இல்லையோ, ஒவ்வொரு முறையும் வேதத்தைப் வாசிக்கத் தொடங்கும்போது, வேதாகமத்தை நன்றாகக் கையாளுவதற்கு பல தாக்கங்கள் ஏற்கனவே நம்மைத் தயார்படுத்தியுள்ளன, ஆனால் மற்ற தாக்கங்கள் வலுவான வேத வியாக்கியானத்திற்கு தடைகளை உருவாக்கியுள்ளன. இந்தக் காரணத்திற்காக, வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கு நம்மால் முடிந்தவரை நம்மைத் தயார்படுத்திக் கொள்வதில் இந்தப் பாடங்கள் நன்றாக கவனம் செலுத்தும்.

> வேதாகமத்தை படிக்க, நம்மை ஆயத்தப்படுத்த, அல்லது நம்மைத் தயார்படுத்திக் கொள்ள நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் நிறைய உள்ளன என்று நான் நினைக்கிறேன்... வேதத்தை படிப்பது கடின உழைப்பாகும். நாம் ஆராய வேண்டிய விவரங்கள் உள்ளன, மேலும் நாம் வேதாகமத்தைப் படிக்கும்போதும், தேவனுடைய ஆவிக்கு நாம் செவியை சாய்க்கும் போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டிய பல விவரங்கள் உள்ளன. எனவே நாம் நல்ல உபகரணங்களைக் கொண்டு தயாராக வேண்டும். பிறர் எழுதிய நல்ல விஷயங்களைக் கொண்டு நாம் தயாராக வேண்டும். ஜெபிப்பதன் மூலமும் பரிசுத்த ஆவியானவரை அனுமதித்து நம் வாழ்க்கையில் கிரியை செய்ய அவருக்கு சுதந்திரத்தை வழங்குவதன் மூலமும் நாம் தயாராக வேண்டும்... உங்கள் சொந்த வாழ்க்கைக்காக தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, பின்னர் அந்த சத்தத்தை மற்றவர்களுக்கும் அனுப்பப் போகிறீர்கள்.
>
> — Dr. ஸ்டீஃபன் ஜே. ப்ராமர்

வியாக்கியானம் சம்பந்தமான ஆயத்தத்தோடு, விசாரணையின் செயல்முறையையும் நாம் ஆராய்வோம். ஆய்வு பற்றிப் பேசும்போது, ஒரு வேதப் பகுதியின் மூலப் பொருளில் கவனம் செலுத்துகிறோம்.

## ஆராய்ச்சி

அடிப்படையில், வேதாகமத்தை ஆராயும்போது, நம்முடைய நவீன உலகப் பார்வையை விட்டுவிட்டு, வேதத்தின் பகுதிகள் முதன்முதலில் எழுதப்பட்டபோது அவற்றின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு நம்மால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். விசாரணை நிகழ்முறையில், தேவனும் வேதத்தின் மனித ஆசிரியர்களும் நோக்கமாகக் கொண்ட மூல அர்த்தத்தில்,

வேதாகம ஆவணங்கள் மற்றும் வேதாகமத்தின் முதல் வாசகர்கள் மீது கவனம் செலுத்துகிறோம். பல விஷயங்களில், நாம் வேதாகமத்தைப் படிக்கும் போதெல்லாம், ஓரளவிற்கு அசல் அர்த்தத்தை எடுத்துக்கொள்வதை நம்மால் தவிர்க்க முடியாது.

எடுத்துக்காட்டாக, வேதத்தை அதன் மூல மொழிகளில் ஆராய்ந்தால், பண்டைய எபிரேய, அராமிய மற்றும் கிரேக்க நூல்களின் மொழியியல் மரபுகளை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வேதத்தின் நவீன மொழிபெயர்ப்பை நாம் நம்பினாலும், அந்த மொழிபெயர்ப்பு சொற்களின் பண்டைய அர்த்தங்கள் மற்றும் இலக்கண வெளிப்பாடுகளின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த மற்றும் பல வழிகளில், ஒரு வேத பகுதியின் அசல் அர்த்தம் எப்போதும் அதன் வியாக்கியானத்திற்கு முக்கியமானது. எனவே, விசாரணை செயல்முறையிலும் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வியாக்கியான செயல்முறைகள் ஆயத்தம் மற்றும் விசாரணையை மட்டுமல்லாமல், அவை பயன்பாட்டின் செயல்முறையையும் உள்ளடக்குகின்றன.

## பிரயோகம்

எளிமையான வார்த்தைகளில் கூறுவதானால், பிரயோகம் என்பது அசல் அர்த்தத்தை சமகால வாசகர்களுடன் பொருத்தமாக இணைப்பதாகும். அசல் அர்த்தத்தைப் புரிந்துகொண்டவுடன், நாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக் கடந்து நமது நவீன சூழ்நிலைக்குள் பயணிக்கிறோம். பிரயோகத்தில், தேவனுடைய மக்களாகிய நமக்கு வேதவசனங்கள் எவ்வாறு பொருந்த வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்கிறோம்.

மற்ற வியாக்கியான செயல்முறைகளைப் போலவே, பிரயோகத்தை முற்றிலுமாகத் தவிர்ப்பது சாத்தியமற்றது. ஒரு வேதப் பகுதியைப் பற்றிய மேலோட்டமான புரிதலை நாம் பெற்றாலும், அதை ஓரளவுக்கு நம் சிந்தனையில் பிரயோகிக்கிறோம். வேதத்தைப் புரிந்துகொண்டு அதற்குக் கீழ்ப்படியாத பாசாங்குத்தனத்திற்கு எதிராக வேதாகமம் எச்சரிக்கை செய்கிறது. எனவே, இந்தத் தொடரில் வேதாகமத்தை வேண்டுமென்றே பிரயோகிப்பதில் அதிக கவனம் செலுத்துவோம்.

இந்த பாடங்களை நாம் படிக்கும்போது, ஆயத்தம், ஆராய்ச்சி மற்றும் பிரயோகம் ஆகியவை மிகவும் ஒன்றையொன்று சார்ந்த செயல்முறைகள் என்பதைக் காண்போம். ஒரு செயல்பாட்டில் நாம் மற்றவற்றில் சிறப்பாக செயல்பட்டால் மட்டுமே நம்மால் சிறப்பாக செயல்பட முடியும். நிச்சயமாக, ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விருப்பங்கள் மற்றும் திறன்கள் உள்ளன,

இதன் விளைவாக இந்த செயல்முறைகளில் ஒன்று அல்லது இரண்டை மட்டுமே நாம் வலியுறுத்த முனைகிறோம். ஆனால் ஆயத்தம், ஆராய்ச்சி மற்றும் பிரயோகம் ஆகியவற்றின் ஒன்றையொன்று சார்ந்திருத்தல் இந்த மூன்று துறைகளிலும் நமது திறன்களை வளர்த்துக் கொள்ள நினைவூட்டுகிறது.

இப்போது நாம் வேதாகம வியாக்கியான இயலின் அறிமுகத்தில் சில முக்கியமான சொற்களை விளக்கியுள்ளோம், நமது இரண்டாவது முக்கிய தலைப்பான அறிவியல் வியாக்கியான இயலுக்கு திரும்ப வேண்டும். அதாவது பல நூற்றாண்டுகளாக வேத அறிஞர்கள் வேதாகமத்தின் வியாக்கியானத்தை ஒரு அறிவியல் பயிற்சி போல மேலும் மேலும் அணுகியுள்ளனர் என்பதைப் பார்ப்போம்.

# அறிவியல் வியாக்கியான இயல்

ஏதோ ஒரு வகையில், வேதாகம வியாக்கியான இயல் எப்போதும் ஒரு அறிவியல் நறுமணத்தைக் கொண்டுள்ளது, மேலும் இந்த போக்கு பல துறைகளில் இருப்பதைப் போலவே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்துள்ளது. இந்த முன்னேற்றங்களுக்கான காரணம் தெளிவாகத் தெரிகிறது. வேதம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் எழுதப்பட்டது. எனவே, பல வழிகளில், வேதவாக்கியங்களை பண்டைய உலகின் மற்ற எழுத்துக்களைப் போலவே நாம் சரியாக நடத்துகிறோம். வேதத்தை அதன் வரலாற்றுப் பின்னணியைக் கருத்தில் கொண்டு அறிஞர்கள் கையாண்டதால், அவர்கள் பெரும்பாலும் தொல்லியல், வரலாறு, மானுடவியல், சமூகவியல் மற்றும் மொழியியல் போன்ற அறிவியல் துறைகளினால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இந்த மற்றும் பிற அறிவியல் முயற்சிகளைப் போலவே, வேதாகமத்தின் கல்வி வியாக்கியான அறிஞர்கள் வேதத்திற்கு உண்மையான அல்லது பகுத்தறிவுள்ள, அறிவியல் முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

நாம் எதைக் குறிக்கிறோம் என்பதைப் பார்க்க, அறிவியல் வியாக்கியான இயல் தொடர்பான மூன்று பிரச்சனைகளைத் தொடுவோம். முதலில், இந்த அணுகுமுறையின் வேதாகம மூலங்களைக் குறிப்பிடுவதன் மூலம் அதன் சட்டபூர்வமான தன்மையை நாம் சுட்டிக்காட்டுவோம். இரண்டாவதாக, இந்த வகை வியாக்கியான இயலின் வளர்ச்சிகளை விளக்கும் சில வரலாற்று எடுத்துக்காட்டுகளை நாம் குறிப்பிடுவோம். மூன்றாவதாக, வேதாகமத்திற்கான இந்த அணுகுமுறை வியாக்கியான செயல்முறைகளுக்கு சில



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்னுரிமைகளை எவ்வாறு நிறுவுகிறது என்பதைப் பார்ப்போம். முதலில் அறிவியல் ரீதியான வியாக்கியனத்தின் வேத மூலங்களைப் பார்ப்போம்.

## வேத மூலங்கள்

வேதாகம காலத்தில் வாழ்ந்தவர்கள் நவீன அறிவியலாளர்கள் அல்ல. ஆனால் அதற்கு அவர்கள் அறிவற்றவர்கள் அல்லது பகுத்தறிவற்றவர்கள் என்று அர்த்தமல்ல. மாறாக, அவர்களின் அதிநவீன கட்டிடக்கலை சாதனைகள், விரிவான கடல் பயணம், புதுமையான விவசாயத் திட்டங்கள் மற்றும் எண்ணற்ற பிற கலாச்சார சாதனைகள் வேதாகம நாட்களில் மக்கள் நவீன விஞ்ஞானிகளைப் போலவே உலகைப் பற்றிய உண்மைகளையும் பகுத்தறிவுடன் சிந்தித்ததையும் கையாண்டனர் என்பதை நிரூபிக்கின்றன.

இந்த காரணத்திற்காக, வேத ஆசிரியர்களே பெரும்பாலும் உண்மையான மற்றும் தர்க்கரீதியான பகுப்பாய்வை நோக்கிய நோக்குநிலையுடன் மற்ற வேதாகமங்களை வியாக்கியானம் செய்ததில் நாம் ஆச்சரியப்படக்கூடாது. நேரமின்மையால், நாம் எதைக் குறிக்கிறோம் என்பதை ஒரே ஒரு வேத பகுதியைக் கொண்டு விளக்குவோம். ரோமர் 4:3-5-ல் அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு எழுதினார்:

> வேதம் என்ன சொல்கிறது? “ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.” கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும் (ரோமர் 4:3-5).

இந்த வசனங்களில், ஆதியாகமம் 15:6-ல் இருந்து பவுல் மேற்கோள் காட்டினார், அங்கு ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பியபோது அவருக்கு அதை நீதியாக ”எண்ணினார்.” ஆனால் இந்த பழைய ஏற்பாட்டுப் பகுதியை பவுல் எப்படி முறையாக நடத்தினார் என்பதைக் கவனிக்கவும். 4 மற்றும் 5 வசனங்களில், லோகிசோமாய் என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்த்து பவுல் ”வரவு” அல்லது ”கணக்கிடப்பட்ட” என்கிற வார்த்தையின் அர்த்தத்தை கவனமாக பகுப்பாய்வு செய்தார். கிரேக்க மொழியில் அவருக்கு இருந்த அறிவினால், ”ஊதியங்கள் அன்பளிப்பாக வரவு வைக்கப்படுவதில்லை, ஆனால் ஒரு கடமையாக கொடுக்கப்படுகின்றன” என்று அவர் வாதித்தார். ஆனால் தேவனை விசுவாசிக்கிற எவருக்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களுடைய ”விசுவாசம்” – கிரியைகளாக அல்லாமல் ”நீதியாகக் கருதப்படுகிறது” என்று அவர் குறிப்பிட்டார். எனவே, ஆபிரகாமுக்கு விசுவாசத்தின் மூலம் ஒரு இலவச பரிசாக நீதி வழங்கப்பட்டது என்பதை ஆதியாகமம் 15:6 சுட்டிக்காட்டுகிறது என்று இந்த காரணத்தின் அடிப்படையில் அவர் முடிவு செய்தார். ஆதியாகமம் 15-ஐ அப்போஸ்தலனாகிய பவுல் மிக நுணுக்கமாகவும் தர்க்கரீதியாகவும் பகுப்பாய்வு செய்து கையாண்டார் என்பதை இங்கே காண்பது கடினம் அல்ல.

இந்த ஒரு எடுத்துக்காட்டு விளக்குவது போல, வேதாகம ஆசிரியர்கள் வேதாகமத்தின் இந்த வகையான கவனமான வியாக்கியானத்தை மீண்டும் மீண்டும் முன்வைத்தனர். மேலும் வேதாகமத்தைப் பற்றிய அவர்களின் அணுகுமுறையானது, அறிவியல் ரீதியான வேத வியாக்கியானம் வேதாகமத்திலேயே உறுதியாக வேரூன்றியிருப்பதைக் குறிக்கிறது.

அறிவியல் வியாக்கியான இயலின் வேதாகம மூலங்களை மனதில் கொண்டு, இந்த வகையான வேதாகம வியாக்கியானத்தின் சில வரலாற்று எடுத்துக்காட்டுகளை சுருக்கமாகப் பார்ப்போம்.

## உதாரணங்கள்

சபை வாரலாற்று காலத்தில், வேத வியாக்கியானத்தில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களில் ஒருவர் அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த ஒரிகன் ஆவார், அவர் கி.பி.185 முதல் 254 வரை வாழ்ந்தார். இந்தப் பாடத்தில் நாம் பின்னர் பார்க்கப் போவது போல, ஒரிகன் அறிவியல் வியாக்கியானத்திற்கு அப்பாற்பட்டவர், ஆனால் வேதத்தின் கவனமான உண்மை மற்றும் பகுத்தறிவு பகுப்பாய்வுகளுக்கு அவர் தன்னை அர்ப்பணித்தார். எடுத்துக்காட்டாக, ஒரிகனின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று ஹெக்சாப்லாவை உருவாக்கியது, இது 50 க்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட 6,000 பக்க படைப்பாகும், இதில் ஒரிகன் பழைய ஏற்பாட்டின் பல்வேறு எபிரெய மற்றும் கிரேக்க பதிப்புகளை வார்த்தை வாரியாக ஒப்பிட்டார். இந்த படைப்பு பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தொலைந்துவிட்டாலும், ஆரம்பகால திருச்சபை வரலாற்றில் அறிவியல் வேத வியாக்கியானத்திற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாக இருக்கிறது.

வேதாகமத்திற்கு அறிவியல் அணுகுமுறைகளை வளர்ப்பதற்கான பிற முக்கிய எடுத்துக்காட்டுகள் ஒரிகனின் நாட்களுக்குப் பிறகு தோன்றுகின்றன. உதாரணமாக, கி.பி.354 முதல் கி.பி.430 வரை வாழ்ந்த ஹிப்போவை சேர்ந்த அகஸ்டின், வேதத்தின் கவனமான, பெரும்பாலும் கடினமான, உண்மை மற்றும் பகுத்தறிவு பகுப்பாய்வில் தொடர்ந்து கவனம் செலுத்தினார். சுமார் 1225 முதல் 1274 வரை வாழ்ந்த தாமஸ் அக்வினாஸின் காலத்தில், மேற்கத்திய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்தவத்தில் வேதாகம விளக்கத்தின் பிரதான நீரோட்டமானது அரிஸ்டாட்டிலின் பகுத்தறிவு மற்றும் அறிவியல் தத்துவத்தின் செல்வாக்கை பிரதிபலித்தது. அக்வினாஸும் அவரைப் பின்பற்றுபவர்களும் வேதத்தை வியாக்கியானம் செய்வதில் கடுமையான அனுபவ மற்றும் தர்க்கரீதியான பகுப்பாய்வைப் பயன்படுத்தினர்.

துரதிர்ஷ்டவசமாக, சபை வரலாற்றில் இந்த நேரம் வரை கல்வியறிவு விகிதம் குறைவாக இருந்தது, மேலும் வேதாகமம் மற்றும் பிற புத்தகங்கள் பரவலாக கிடைக்கவில்லை. எனவே, ஒரு சில வசதி படைத்தவர்களால் மட்டுமே உண்மையில் வேதவாக்கியங்களைப் படிக்க முடிந்தது. இதன் விளைவாக, பொது மக்கள் வேதத்தை எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதை சபை அதிகாரிகள் கட்டுப்படுத்தினர். ஆனால் இந்த சூழலில், திருச்சபையின் மேலாதிக்கத்தைத் தவிர, பல அறிஞர்கள் இன்னும் நுட்பமான அறிவியல் பகுப்பாய்வு மூலம் வேதாகமத்தை வியாக்கியானம் செய்யத் தொடங்கினர்.

இந்த திசையில் ஆரம்பகால நடவடிக்கைகளில் ஒன்று மறுமலர்ச்சியின் போது நடந்தது. 1204 ஆம் ஆண்டில் நான்காவது சிலுவைப்போரில் கான்ஸ்டாண்டிநோபிள் கைப்பற்றப்பட்ட பின்னர், அங்கு சேமிக்கப்பட்ட பல பாரம்பரிய மற்றும் வேதாகம கையெழுத்துப் பிரதிகள் மேற்கத்திய நாடுகளுக்கு கொண்டு வரப்பட்டன. ஆனால் இந்த பண்டைய நூல்களின் முக்கியத்துவத்தை திருச்சபைக் கோட்பாட்டின் வெளிச்சத்தில் வியாக்கியானம் செய்வதற்கு பதிலாக, மறுமலர்ச்சி அறிஞர்கள் அவற்றின் இலக்கணத்தையும் பண்டைய வரலாற்றுச் சூழலையும் நுணுக்கமாக பகுப்பாய்வு செய்வதன் மூலம் இந்த நூல்களைப் புரிந்துகொள்வதில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். 1450 ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வந்த குட்டன்பெர்க்கின் அசையும் வகை அச்சு இயந்திரத்தின் உதவியுடன், மறுமலர்ச்சி ஆராய்ச்சி பரவலாகக் கிடைக்க நீண்ட காலம் ஆகவில்லை. இதன் விளைவாக, 1466 முதல் 1536 வரை வாழ்ந்த எராஸ்மஸ் போன்ற செல்வாக்குமிக்க நபர்கள் வேதாகம வியாக்கியானத்திற்கான விஞ்ஞான அணுகுமுறைகளை நோக்கி தங்கள் காலத்தில் பலரை வழிநடத்தினர்.

பதினாறாம் நூற்றாண்டில் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் அறிவியல் வேத வியாக்கியானத்தை மேலும் அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றது. மறுமலர்ச்சியின் பாதையைப் பின்பற்றி, மார்ட்டின் லூதர், உல்ரிச் ஸ்விங்லி மற்றும் ஜான் கால்வின் போன்ற ஆரம்பகால புராட்டஸ்டன்ட் தலைவர்கள் வேதாகம வியாக்கியானத்தை விட சபைக் கோட்பாட்டின் ஆதிக்கத்தை கடுமையாக நிராகரித்தனர். மாறாக, வேதாகமத்தின் இலக்கணம் மற்றும் வரலாற்றுச் சூழல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வேதாகமத்தின் அர்த்தம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் இந்த அழுத்தத்தை சோலா ஸ்கிரிப்டூராவின் நன்கு அறியப்பட்ட கோட்பாடான ”வேதம் மட்டுமே” என்பதுடன் இணைத்தனர் என்பதை நினைவில் கொள்வது அவசியம். வேதாகமம் மட்டுமே கேள்விக்கிடமற்ற ஒரே அதிகாரம் ஆகும், மேலும் மற்றவைகள் அனைத்தும் இதன் மூலம் அளவிடப்படவேண்டிய அளவிற்கு இது மிக உயர்ந்த அதிகாரமாக இருக்கிறது என்பதை புராட்டஸ்டன்ட்கள் புரிந்து கொண்டனர். வேதாகம அதிகாரத்தின் மேலாதிக்கத்திற்கான இந்த அர்ப்பணிப்பு என்பது வேதாகமத்தின் ஒரே தவறுதலற்ற வியாக்கியான அறிஞர் வேதாகமம் மட்டுமே என்பதைக் குறிக்கிறது. எனவே, ஆரம்பகால புராட்டஸ்டன்ட்களுக்கு வேதத்தை அதன் பண்டைய வரலாற்றுப் பின்னணியில் அதன் இலக்கணத்தின் நுணுக்கமான, பகுத்தறிவு பகுப்பாய்வு மூலம் புரிந்துகொள்வதை விட வேறு எதுவும் முக்கியமானதாக இல்லை.

பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவொளி இயக்கமானது, வேதாகமம் உட்பட அனைத்து உண்மை கூற்றுக்களையும் மதிப்பிடுவதற்கான நவீன, உண்மை மற்றும் பகுத்தறிவு அறிவியல் தரங்களை வலியுறுத்துவதன் மூலம் அறிவியல் வேதாகம வியாக்கியானத்தை மேலும் வலுப்படுத்தியது. புவியியலாளர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிற நவீன விஞ்ஞானிகளைப் போலவே, வேதாகம அறிஞர்களும் வேதாகம ஆய்வுக்கு அறிவியல் தரங்களை கவனமாகப் பயன்படுத்தினர்.

வேதாகமத்தைப் பற்றிய இந்த அணுகுமுறை பல நூற்றாண்டுகளாக பல வழிகளில் வளர்ந்துள்ளது. ஆனால் நவீன வேதாகம அறிஞர்கள் ஏதோ ஒரு வகையில் இரண்டு முக்கிய வழிகளைப் பின்பற்றியுள்ளனர். ஒருபுறம், முன்னணி கல்வி நிறுவனங்களில் உள்ள பெரும்பாலான வியாக்கியான அறிஞர்கள் பெரும்பாலும் விமர்சன வேதாகம ஆய்வுகள் என்று அழைக்கப்படும் ஒரு திசையைப் பின்பற்றியுள்ளனர். பரந்த அளவில் பேசும்போது, வேதம் மட்டுமே என்கிற பாரம்பரிய புராட்டஸ்டன்ட் கோட்பாட்டை நிராகரித்து, உண்மையைப் பகுத்தறிவதற்கான உயர்ந்த அளவுகோலாக பகுத்தறிவு மற்றும் அறிவியல் பகுப்பாய்வை மட்டுமே கருதுபவர்கள் விமர்சன வேதாகம அறிஞர்கள் ஆவர். மொத்தத்தில், வேதவசனங்கள் தேவன், மனிதகுலம் மற்றும் உலகம் பற்றிய பண்டைய, பழமையான மற்றும் நம்பகத்தன்மையற்ற பார்வைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று விமர்சன வியாக்கியான அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். இந்தக் கண்ணோட்டத்தில், நவீன மக்கள் சில வழிகளில் வேதாகமத்திலிருந்து பயனடையலாம், ஆனால் வேதாகமத்தைப் பற்றிய எந்தவொரு தீர்ப்புகளும் வேதத்தின் போதனைகளை விட விஞ்ஞான விசாரணையை சார்ந்திருக்க வேண்டும்.

மறுபுறம், மற்ற வல்லுநர்கள் நவீன சுவிசேஷ வேதாகம ஆய்வுகள் என்று நாம் அழைக்கக்கூடிய ஒரு பாதையைப் பின்பற்றியுள்ளனர். விசுவாசம் மற்றும் வாழ்க்கையின் ஒரே உறுதியான விதி வேதம் மட்டுமே என்று சுவிசேஷக அறிஞர்கள் உறுதிப்படுத்துகின்றனர். வேதத்தின் மீதான உண்மை மற்றும் பகுத்தறிவு அறிவியல் பிரதிபலிப்பை அவர்கள் நிராகரிக்கவில்லை; வேதத்தில் அறிவியல் பகுப்பாய்வின் கடுமையான பயன்பாட்டை அவர்கள் முழுமையாக ஆதரிக்கிறார்கள். ஆயினும், இத்தகைய பகுப்பாய்வு வேதத்தின் போதனைகளுக்கு முற்றிலும் முரணாக இருக்கும்போது, சுவிசேஷ அறிஞர்கள் முழு மனதுடன் வேதவாக்கியங்களை தங்கள் அதிகாரமாக ஏற்றுக்கொள்கிறார்கள். இந்தப் பாடங்கள் முழுவதிலும் நாம் காண்பது போல, இந்தத் தொடர் சுவிசேஷப் பாதையைப் பின்பற்றுகிறது.

> ஒரு கிறிஸ்தவர், குறிப்பாக புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர், வேதாகமத்தின் அதிகாரத்திற்கு அடிபணிவது மிக முக்கியமான விஷயமாகும்… உண்மையான அதிகாரம் என்பது ஒப்புதலைக் கட்டாயப்படுத்துவதற்கான உரிமையும் அதிகாரமும் ஆகும், மேலும் கிறிஸ்தவரின் வாழ்க்கையில் அதிகாரமாக செயல்பட வேதாகமம் தனித்துவமாக தகுதியுடையது. இதற்கு ஒரு காரணம், வேதாகமத்தில் ஞானமும் நுண்ணறிவும் உள்ளன, இதை வேறெங்கும் பெற முடியாது. அதனால்தான் இது வெளிப்பாடு என்று அழைக்கப்படுகிறது… மற்றொரு காரணம் என்னவென்றால், பல இடங்களில் சத்தியம் காணப்பட்டாலும், வேதாகமத்தில் பொதிந்துள்ள சத்தியம் அதன் அமைப்பு மற்றும் இறுதி வடிவத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மேற்பார்வையிடப்பட்டுள்ளது, இதனால் இந்த உலகில் நாம் அணுகும் அனைத்து சத்திய ஆதாரங்களிலும் தனித்துவமான நம்பகத்தன்மை மற்றும் பிழையற்ற தன்மை உள்ளது. அந்த தனித்துவமான நம்பகத்தன்மையையும், அந்த பிழையற்ற தன்மையையும், பொய்க்காத தன்மையையும் பெற்றதற்கான காரணம், அது தேவனுடைய நாசியிலிருந்து வந்தது என்பது தான் என்று நாம் அறிவோம். இதுவே தேவனுடைய வார்த்தையாகும், எனவே வேதாகமத்தின் அதிகாரத்தைப் பற்றி நாம் பேசும்போது நாம் உண்மையில் தேவனுடைய அதிகாரத்தைப் பற்றி பேசுகிறோம். எனவே அதற்கு அடிபணிவது என்பது நாம் சிருஷ்டிக்கப்பட்டவர்கள், நாம் வழித்தோன்றல்கள் மற்றும் சார்புடைய உயிரினங்கள் என்பதை ஒப்புக்கொள்வதாகும். இங்கே முரண்பாடு என்பது

> இது தான்: இந்த கீழ்ப்படிதல் நம்மை இழிவுபடுத்தவோ அல்லது நம்மை வல்லமையற்றவர்களாகவோ மாற்றவோ செய்யாமல், இது நம்மை சத்தியத்தின் திசையில் நடத்தி, வாழ்க்கை மற்றும் செழிப்புக்கான பாதையில் நம்மை உறுதியாக வைக்கிறது. உண்மையில் நாம் செய்யக்கூடிய மிகவும் வல்லமை வாய்ந்த விஷயம் இதுவாகும்.
>
> – Dr. கிளென் ஸ்கார்கி

அறிவியல் வியாக்கியான இயலின் வேதாகம மூலங்களைக் குறிப்பிட்டு, சில வரலாற்று எடுத்துக்காட்டுகளைப் பார்த்த பிறகு, நாம் இப்போது வேதாகமத்திற்கான இந்த அணுகுமுறையின் முன்னுரிமைகள் என்கிற மூன்றாவது பிரச்சனைக்கு திரும்ப வேண்டும்.

# முன்னுரிமைகள்

ஒட்டுமொத்தமாக, உலகெங்கிலும் உள்ள நவீன சுவிசேஷ வேத அறிஞர்கள் அறிவியல் வியாக்கியானத்திற்கு வலுவாக உறுதிபூண்டுள்ளனர். இந்த அர்ப்பணிப்பானது ஆயத்தம், ஆராய்ச்சி மற்றும் பிரயோக செயல்முறைகளுக்கு சில முன்னுரிமைகளுக்கு வழிவகுத்தது. ஆயத்தத்திற்கான வழக்கமான முன்னுரிமைகளிலிருந்து தொடங்கி, இது எவ்வாறு உண்மையாக இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

## ஆயத்தம்

நாம் முன்பே கூறியது போல, வேதாகமத்தை வியாக்கியானம் செய்யத் தொடங்கும் போதெல்லாம் ஆயத்தமானது தவிர்க்க முடியாதது. ஆனால் கல்வியியல் வேதாகம வியாக்கியான அறிஞர்கள் ஆயத்தத்திற்கான முன்னுரிமைகளை உருவாக்கியுள்ளனர், அவை பல கல்வித் துறைகளில் காணப்படும் அறிவுசார் முன்னுரிமைகளுக்கு ஏறக்குறைய ஒத்துப்போகின்றன.

நீங்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் உயிரியல் படிக்கப் போகிறீர்கள் என்றால், உங்களால் முடிந்தவரை உங்களைத் தயார்படுத்த விரும்புகிறீர்கள். எனவே ”நான் என் படிப்புக்கு எவ்வாறு தயாராக வேண்டும்?” என்று நீங்கள் பல உயிரியல் பேராசிரியர்களிடம் கேட்பீர்கள். பின்வரும் விஷயங்களை அவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்: ”உங்களால் முடிந்தவரை பல உயிரியல் உண்மைகளை நினைவில் கொள்ளுங்கள்.” மேலும், ”உயிரியலில் நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பயன்படுத்தும் அறிவியல் நடைமுறைகளைப் பற்றி உங்களால் முடிந்த அனைத்தையும் அறிக."

அதுபோலவே, இன்று பெரும்பாலான சுவிசேஷ இறையியல் நிறுவனங்களில் உள்ள பெரும்பாலான பேராசிரியர்களிடம், அவர்களுடைய பள்ளிகளில் வேதத்தைப் படிக்க நீங்கள் எப்படித் தயாராக வேண்டும் என்று கேட்டால், அவர்களில் பெரும்பாலோர் இதே போன்ற ஆலோசனைகளை வழங்குவார்கள். "எபிரெய மொழியையும் கிரேக்கத்தையும் கற்றுக்கொள்ளுங்கள்", "வேதத்தைப் பற்றி முடிந்தவரை பல உண்மைகளைக் கற்றுக்கொள்ளுங்கள்." "நல்ல விளக்க முறைகளைக் கற்றுக்கொள்ளுங்கள்" என்று அவர்கள் சொல்லலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, இன்று பெரும்பாலான வேத அறிஞர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் வேதத்தைப் பற்றிய பகுத்தறிவு மற்றும் அறிவியல் அணுகுமுறைகளை வலியுறுத்துகிறார்கள். தங்கள் மாணவர்களின் வெற்றி அவர்கள் அதைச் செய்வதைப் பொறுத்தது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

நிச்சயமாக, உண்மை மற்றும் முறையியல் புரிதலுடன் நம்மைத் தயார்படுத்துவது முக்கியம். வேதத்தைப் பற்றிய உண்மைகளைக் கற்றுக்கொள்வதற்கு மாற்று எதுவும் இல்லை. வேதாகம வியாக்கியானத்திற்குத் தேவையான கொள்கைகளைக் கற்றுக்கொள்ள நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். ஆனால் ஒரு கணத்தில் நாம் காண்பது போல, அறிவார்ந்த ஆயத்தத்தில் மட்டுமே கவனம் செலுத்துவது வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான வழிகளில் சிலவற்றைப் புறக்கணிக்கிறது.

ஆயத்தத்திற்கான சில முன்னுரிமைகளைப் பார்த்த பிறகு, அறிவியல் வியாக்கியான ஆய்வுக்கான முன்னுரிமைகளைப் பார்ப்போம்.

## ஆராய்ச்சி

பொதுவாக, வேத வியாக்கியான அறிஞர்கள் வேதாகமத்தை ஆராய்வதற்கான வேத விளக்கவுரை மற்றும் நம் கருத்தை வேதத்தில் திணித்தல் ஆகிய இரண்டு வழிகளை வேறுபடுத்துகிறார்கள். வேத விளக்கவுரை என்பது கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது, அதாவது "வெளியே எடுத்தல்" அல்லது "பெறப்பட்டு" என்பது இதன் அர்த்தமாகும் மற்றும் ஒரு உரையிலிருந்து வெளியே எடுப்பது அல்லது அர்த்தத்தைப் பெறுவது என்றும் பொருள்படும். இதற்கு நேர்மாறாக, வேதத்தில் நாம் கருத்தை திணித்தல் என்பது "உள்ளுக்குள் வழிநடத்தப்பட்டது" அல்லது "உள்ளே வைக்கப்பட்டது" என்ற அர்த்தங்களைக் கொண்டுள்ளது. இதன் பொருள் அர்த்தத்தை வேத பகுதிக்குள் திணிப்பது என்பதாகும். அறிவியல் சார்ந்த வேத

வியாக்கியான அறிஞர்கள் வேதத்தில் தங்கள் கருத்தை திணிப்பதைத் தவிர்க்க மிகவும் கடினமாக உழைக்கிறார்கள். அதற்குப் பதிலாக, அவர்கள் வேதவசனத்தைப் பற்றிய புரிதல்களை அல்ல, வெளிப்படையான புரிதல்களை உறுதிப்படுத்தும் என்று அவர்கள் நம்பும் வியாக்கியானக் கொள்கைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தக் கண்ணோட்டத்தில், வேதாகமத்தின் உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கான நமது அறிவார்ந்த ஆயத்தங்களை செயல்படுத்துவதே விசாரணையாகும். ஒருவரின் கருத்து அல்லது நோக்கத்தை மட்டுமல்லாமல், உண்மையான அசல் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு கவனமாக வடிவமைக்கப்பட்ட முறைகள் அல்லது வியாக்கியானக் கோட்பாடுகளை நுணுக்கமாக செயல்படுத்துவதன் மூலம் வேத நூல்களின் அசல் அர்த்தத்தை நாம் ஆராய்வோம்.

இந்தத் தொடர் முழுவதும் நாம் காண்பது போல, இந்த வழியில் அறிவியல் முறைகளை செயல்படுத்துவது வேத வியாக்கியானத்தின் மிக முக்கியமான பரிமாணமாகும். ஆனால் வேதாகமத்தின் மூலப் பொருளை நன்கு ஆராய்வதற்குத் தேவையான அனைத்தையும் அது உள்ளடக்குவதில்லை என்பதையும் நாம் காண்போம்.

ஆயத்தம் மற்றும் ஆய்வு செயல்முறைகளில் அறிவார்ந்த, அறிவியல் வியாக்கியானத்திற்கான சில முன்னுரிமைகளைப் பார்த்தோம். இப்போது பிரயோகசெயல்முறை பற்றி கேட்க நாம் தயாராக இருக்கிறோம். பெரும்பான்மையான சுவிசேஷ அறிஞர்கள் இன்று வேதத்தை எப்படி பிரயோகிக்கிறார்கள்?

## பிரயோகம்

நான் இறையியல் மாணவனாக இருந்தபோது, பேராசிரியர்கள் விரிவுரையாற்றும்போது ஒரு குறிப்பிட்ட மாணவன் அடிக்கடி குறுக்கிடுவார். அவரது கேள்விகள் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்தன. ”பேராசிரியரே, இன்று உங்கள் விளக்கவுரையின் தாக்கங்கள் என்ன?” ”இந்த வேதாகமப் பகுதியைப் பற்றி நீங்கள் சொல்வதை நான் எப்படி என் வாழ்க்கையில் பயன்படுத்துவது?” என்று கேட்பார். அரிதான விதிவிலக்கு தவிர, பதில் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்தது. ”இது ஒரு பெரிய கேள்வி. ஆனால் எனக்கு அல்ல, நடைமுறை இறையியல் பேராசிரியர்களுக்கு” என்று பேராசிரியர் சிரித்துக் கொண்டே சொல்வார்.

இந்த அனுபவம் விளக்குவது போல, பெரும்பாலும், வேதத்தின் விஞ்ஞான, அறிவார்ந்த வியாக்கியானமானது வேதாகமத்தின் நடைமுறை பயன்பாட்டிற்கு அதிகம் இடமளிப்பதில்லை. அதிகபட்சம், இது உண்மை சார்ந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நவீன பயன்பாட்டிற்கு வழிவகுக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பிரயோகம் முதன்மையாக கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை நம்புவதற்கு வேதம் கற்பிக்கும் உண்மைகளின் வகைகளை நிறுவுவதாகும். வேதத்தின் இறையியல் மற்றும் தார்மீக உண்மை கூற்றுக்கள் உண்மை என்று விசுவாசிகள் நம்ப வேண்டும் என்று நாம் அழைக்கிறோம். நிச்சயமாக, இந்த வகை பிரயோகம் பெரும் மதிப்புடையது. ஆனால் வேதாகமம் இன்று நம் வாழ்க்கையில் பயன்படுத்தப்பட வேண்டிய பல முக்கியமான வழிகளை அது புறக்கணிக்கிறது.

> வேதாகம ஆய்வு முறைகள் முக்கியமானவை, ஆனால் சில நேரங்களில் நாம் அவற்றை மிகைப்படுத்தலாம், ஏனென்றால் அது தானியங்கியானது போல, அதை மிகவும் இயந்திரமாக்க முடியும், எனவே ”சரி, நான் இந்த முறைகளைப் பயன்படுத்தினேன்; இதோ என் தர்க்கரீதியான முடிவு” என்று நான் எளிதாக சொல்லி விடுவேன், மேலும் இதில் நம்மை முழுமையாக ஈடுபடுத்துவதை விட முற்றிலும் அறிவார்ந்த பயிற்சியாக மாறுகிறது. பல ஆண்டுகளாக நான் கண்ட ஒரு விஷயத்தை பார்த்திருக்கிறேன். எனது சொந்த ஆராய்ச்சியை நான் நிறைய வலியுறுத்திய இடங்களில் ஒன்று கலாச்சார பின்னணி, உலகம், பண்டைய உலகம் ஆகும். ஏனென்றால் அது ஒரு தேவையாக இருந்தது. நிறைய பேருக்கு அது கிடைப்பதில்லை, எனவே ஒரு அறிஞராக என்னால் அதை தாங்கிக் கொள்ள முடியும். நான் அதைச் செய்யும்போது, அது வேதா**கம** நூல்களுக்குத் திரும்பி வரும் என்பதால், அந்த நூல்களைப் புரிந்துகொள்வதற்கான புதிய உலகங்களை அது எனக்குத் திறக்கும் என்று நான் கண்டேன். அதேசமயம், பின்னணியில் ஆவிக்குரிய வாழ்க்கை இல்லை. நான் அதில் அறிவார்ந்த இன்பம் அடைந்தேன், ஆனால் உண்மையான ஆவிக்குரிய வாழ்க்கை வேத உரையில் இருந்தது, அதற்கு திரும்பி வந்து தேவன் உண்மையில் நமக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கேட்பதும், அதற்கு நம் வாழ்க்கையை அர்ப்பணிப்பதும் தான் முக்கியமாகும். இது வெறுமனே ஒரு இயந்திர செயல்முறையாக இருக்க முடியாது. நம்மை நேசித்து நமக்காக தன்னையே அர்ப்பணித்தவருக்கு நம் இருதயத்தை அர்ப்பணிப்பதன் மூலம் மட்டுமே அது வருகிறது.
>
> – Dr. கிரெய்க் எஸ். கீனர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதாகம வியாக்கியான இயலில் பயன்படுத்தப்படும் சில முக்கியமான சொற்களையும், அறிவியல் வியாக்கியான இயலின் நீண்டகால பாரம்பரியத்தையும் நாம் இப்போது பார்த்தோம், அறிவியல் வியாக்கியானம் பக்தி வியாக்கியானத்துடனும் வேதவசனங்களை வியாக்கியானம் செய்யும் போது தேவனை நெருங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் கிறிஸ்தவ பாரம்பரியத்துடனும் எவ்வாறு இணைக்கப்பட வேண்டும் என்கிற நமது மூன்றாவது முக்கிய தலைப்பிற்கு இந்த பாடத்தில் நாம் திரும்ப வேண்டும்.

# பக்தியுடைய வியாக்கியான இயல்

கிறிஸ்துவின் சீஷர்கள் வேதவாக்கியங்களை எழுதியதால், பொதுவான வியாக்கியான இயலின் பல அம்சங்களை ஒத்த அறிவியல் வியாக்கியானவியல்களை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பக்தியுடைய வியாக்கியானவியல் முதன்மையாக வேதாகமத்தின் தெய்வீக எழுத்தில் கவனம் செலுத்துகிறது.

வேதாகமத்தில் இருக்கிற மனித வார்த்தைகளும் தேவனுடைய வார்த்தைகளே என்பதை கிறிஸ்தவர்கள் எப்போதும் ஒப்புக் கொண்டுள்ளனர். 2 தீமோத்தேயு 3:16 நமக்குச் சொல்வது போல, வேதவாக்கியங்கள் தேவனால் ஏவப்பட்டவை, அல்லது உண்மையில் "தேவனால் சுவாசிக்கப்பட்டவை". இந்த உண்மையானது வேதாகம வியாக்கியான இயலை பொதுவான வியாக்கியானவியலின் பிற அம்சங்களிலிருந்து வேறுபடுத்துகிறது, ஏனென்றால் நாம் வேதவாக்கியங்களை தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையாக பக்தியுடன் வியாக்கியானம் செய்ய வேண்டும்.

> வேதாகமத்தை நாம் வியாக்கியானம் செய்யும்போது, நாம் மனித எழுத்தாளர்களின் வார்த்தைகளை மட்டும் கையாளவில்லை என்பதை நினைவில் கொள்வது மிகவும் முக்கியம், திரித்துவத்தின் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவர் அந்த மனித எழுத்தாளர்களின் தனித்துவமான ஆளுமைகள், பாணிகள், அனுபவங்கள் மூலம் இந்த வார்த்தைகளை அருளியுள்ளார். நாம் வேதாகமத்திற்குச் செல்லும்போது, இந்த வார்த்தைகளை அருளிய ஆவியானவரும் விசுவாசிகளாகிய நமக்குள் வசிப்பவராகவும் கிரியை செய்து கொண்டிருப்பவராகவும் இருப்பதால், ஒரு வகையில் வேதாகமத்தின் ஆசிரியரை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அணுகுகிறோம். அது நமக்கு மிகவும் தேவை; நாம் வேதாகமத்தை நெருங்கும்போது, ஜெபத்துடன் அது நம்மிடம் வருவதற்கும், நம் மனதைத் திறக்கவும், வேதவாக்கியங்களை நம் மனங்களுக்குத் திறக்கவும் ஆவியைச் சார்ந்திருக்க வேண்டும்.
>
> – Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

நாம் எதைக் குறிக்கிறோம் என்பதைப் பார்க்க, நமது முந்தைய விவாதத்திற்கு இணையான வழிகளில் பக்தியுடைய வியாக்கியானவியலைப் பார்ப்போம். முதலாவதாக, இந்த வகையான வேத வியாக்கியானம் வேத மூலங்களைக் கொண்டுள்ளது என்பதைக் காண்போம். இரண்டாவதாக, பக்தியுடைய வியாக்கியானவியலைக் கடைப்பிடித்த வேத அறிஞர்களின் சில வரலாற்று எடுத்துக்காட்டுகளை வரைவோம். மூன்றாவதாக, வேதாகமத்திற்கான இந்த அணுகுமுறையைப் பின்பற்றுவது வியாக்கியான செயல்முறைகளுக்கான நமது முன்னுரிமைகளை எவ்வாறு வடிவமைக்கிறது என்பதைப் பார்ப்போம். முதலில் பக்தியுடைய வியாக்கியானவியலின் வேத மூலங்களுக்கு வருவோம்.

## வேத மூலங்கள்

வேத ஆசிரியர்கள் பெரும்பாலும் வேதாகமத்தை ஏறக்குறைய விஞ்ஞான வழிகளில் ஆராய்ந்தாலும், அவர்களும் வேதவாக்கியங்களை பக்தியுடன் அணுகினார்கள் என்பதைப் பார்ப்பது முக்கியம். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக, தேவனுடைய முன்னிலையில், தேவனின் அசாதாரண, இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களைக் கொண்டுவரும் வழிகளில் படிக்க வேண்டும் என்று அவர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினர்.

வேத ஆசிரியர்கள் இந்த வியாக்கியானத்தின் பரிமாணத்தை பல முறை சுட்டிக்காட்டினர், ஆனால் இப்போதைக்கு ஒரு பகுதியை மட்டுமே எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுவோம். எபிரெயர் 4:12 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:12).

இந்த வேத பகுதியில் எபிரெயரின் ஆசிரியர் சங்கீதம் 95-ன் முந்தைய வசனங்களில் மேற்கோள் காட்டிய ஒரு பகுதியைக் குறிப்பிட்டு, அதை ”தேவனுடைய வார்த்தை” என்று அழைத்தார். முன்னதாக எபிரெயர் 4:7-ல் அதே சங்கீதத்தை மேற்கோள் காட்டி, தேவனே ”தாவீதின் மூலம் பேசினார்” என்று கூறினார். இதற்கு முன்பாக, எபிரெயர் 3:7-ல், ”பரிசுத்த ஆவியானவர் கூறுவது போல” என்ற வார்த்தைகளுடன் சங்கீதம் 95-ஐ அறிமுகப்படுத்தினார்.

இப்போது, சங்கீதத்தின் தெய்வீக ஆசிரியரை அங்கீகரித்த பிறகு, எபிரெய எழுத்தாளர் வேதாகமத்தைப் படித்த அனுபவத்தை எவ்வாறு விவரித்தார் என்பதைக் கவனியுங்கள். ”ஜீவனும் வல்லமையுள்ளதாயும்” அது நம்மில் ஆழமாக ”ஊடுருவி” ”இருதயத்தின் எண்ணங்களையும் மனப்பான்மைகளையும் நிதானிக்கிறது”, இது ”எந்த இருபக்க கூர்மையுள்ள வாளையும் விட கூர்மையானது” என்று அவர் கூறினார். அறிவியல் வியாக்கியானவியலில் வேதத்தை பிரித்து பகுப்பாய்வு செய்யும் ஒரு பொருளாகப் பார்க்கிறோம். ஆனால் இந்த வேத பகுதியில் எபிரெய எழுத்தாளர் வேதாகமம் உண்மையில் நம்மைப் பிரித்து பகுப்பாய்வு செய்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

எபிரெயரின் ஆசிரியர் மிகவும் நுட்பமான வேத அறிஞராக இருந்ததால் இந்த பகுதி நம் விவாதத்திற்கு மிகவும் முக்கியமானது. பழைய ஏற்பாட்டு வேதாகமங்களை மற்ற பல புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களை மிஞ்சும் ஆழமான நுண்ணறிவுடன் அவர் மீண்டும் மீண்டும் நடத்தினார். இருப்பினும், வேதத்தைப் பற்றிய அவரது மிகவும் அறிவார்ந்த பகுப்பாய்வுகள் அவரை பக்தியுடைய வியாக்கியானவியலிலிருந்து விலக்கவில்லை. மாறாக, அவருடைய அறிவார்ந்த வியாக்கியானங்கள் வேதவசனங்களை அணுகுவதற்கான அவரது திறனை மேம்படுத்தின, அவை அவரை மிகவும் உணர்ச்சிகரமான, கட்டாயமான மற்றும் தேவனுடன் ஆழமான மாற்றகரமான சந்திப்புகளுக்கு கொண்டு வந்தன. எனவே, அறிவியல் மற்றும் பக்தியுடைய வியாக்கியானவியல்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதை அவர் நமக்குக் காட்டுகிறார்.

பக்தியுடைய வியாக்கியானவியலின் வேத மூல ஆதாரங்களைப் பார்த்த நாம், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் வியாக்கியானத்திற்கான அறிவியல் மற்றும் பக்தியுடைய அணுகுமுறைகளை எவ்வாறு இணைத்துள்ளனர் என்பதை விளக்க சில வரலாற்று எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## உதாரணங்கள்

திருச்சபை வரலாற்று காலத்தில் வேதத்தின் பக்திகரமான வியாக்கியானம் குறிப்பாக முக்கியமானது. அலெக்ஸாண்டிரியாவின் ஒரிகன் ஒரு நுட்பமான, அறிவியல் வேத அறிஞர் என்று முன்பு குறிப்பிட்டோம். ஆயினும்கூட, கிரிகோரிக்கு ஒரிகன் எழுதிய கடிதத்தில் நியோ செசரியாவைச் சேர்ந்த கிரிகோரியை ஒரிகன் ஊக்குவித்த விதத்தைக் கேளுங்கள்:

> நீங்கள் தெய்வீக வாசிப்பில் உங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்போது, நேர்மையாகவும், தேவன் மீது உறுதியான நம்பிக்கையுடனும், பெரும்பாலான மக்களிடமிருந்து மறைக்கப்பட்ட தெய்வீக வார்த்தைகளின் அர்த்தத்தைத் தேடுங்கள். தட்டுவதிலும் தேடுவதிலும் நின்றுவிடாதீர்கள், ஏனென்றால் தெய்வீக வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு ஜெபிப்பது மிகவும் அவசியமான அம்சமாகும்.

இங்கே, ஒரிகன் கிரிகோரியிடம் "தெய்வீக வாசிப்பிற்கு [தன்னை] அர்ப்பணிக்க" கூறினார். "தெய்வீக வாசிப்பு" என்ற சொல் பின்னர் லத்தீன் சொற்றொடரான *லெக்டியோ திவினாவில்* வெளிப்படுத்தப்பட்டது, இது இன்றும் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

இப்போது, வேதாகமத்தைப் பற்றிய ஒரிகனின் அணுகுமுறை நியோ-பிளேட்டோனிசத்தால் ஆழமாக பாதிக்கப்பட்டது, குறிப்பாக அலெக்சாண்டிரியாவின் யூத பழைய ஏற்பாட்டு வியாக்கியான அறிஞர் பிலோவின் படைப்புகளில் இது முன்னர் வெளிப்படுத்தப்பட்டது. இந்தக் கண்ணோட்டத்தில், வேதத்தின் மேற்பரப்பிற்குக் கீழே பரலோக, ஆவிக்குரிய சத்தியங்கள் இருந்தன, அவை "அநேக மக்களிடமிருந்து மறைக்கப்பட்டன." விசுவாசிகள் வேதத்தின் மறைக்கப்பட்ட உண்மைகளைக் கண்டுபிடிக்க விரும்பினால் அவர்களுக்கு "தேவன் மீது உறுதியான விசுவாசம்" தேவை. அதாவது, அவர்கள் "[வேதத்தின்] அர்த்தத்தை தெய்வீக வார்த்தைகளாகத் தேட வேண்டும்." எனவே, வேதாகம வியாக்கியான அறிஞர்கள் தேவனிடமிருந்து தனிப்பட்ட ஞானோதயத்திற்காக "தட்டுவதிலும் தேடுவதிலும்" நிற்கக்கூடாது. உண்மையில், ஒரிகனின் கூற்றுப்படி, வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கு "மிகவும் அவசியமான கூறு" "தெய்வீக வார்த்தைகளைப் புரிந்துகொள்ள ஜெபம் செய்வது" ஆகும். இந்த விஷயங்களில் ஒரிகனின் நியோ-பிளேட்டோனிக் நோக்குநிலையை நாம் நிராகரிக்க வேண்டும் என்றாலும், வேதாகமத்தைப் பற்றி நிச்சயமாக உண்மையாக இருக்கும் ஒன்றை அவர் அங்கீகரித்துள்ளார். விசுவாசிகள் வேதவசனத்தைப் படிக்கும்போது ஜெபமான தியானத்தின் மூலம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனைத் தேடும்போது, தேவன் அவர்களுக்கு நுண்ணறிவுகளை வழங்குகிறார், மற்றபடி பெரும்பாலும் அது அவர்களுக்கு மறைக்கப்படுகிறது.

> நீங்கள் வேதத்தைப் படிக்கும்போது, வேத பகுதியின் ஆவிக்குரிய அர்த்தத்தைப் பெறுவது மிகவும் முக்கியம் என்ற உண்மையை ஒரிகன் போன்றவர்கள் வலியுறுத்தினர். இப்போது அது மிகவும் ஆரோக்கியமான விஷயம் என்று நான் சொல்ல விரும்புகிறேன், ஏனென்றால் வேதம் வெறுமனே ஒரு வரலாற்று புத்தகம் அல்ல, இது நமது இறையியல் கற்பனையைத் தூண்டும் ஒரு கல்வி பாடப்புத்தகம் அல்ல. ஆவிக்குரிய முக்கியத்துவம் உள்ளது … உண்மையில், இவை இரண்டும் ஒன்றாக உள்ளன என்று நாம் நம்புகிறோம், வேத வார்த்தைகளின் பொருள், அவை வேத பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் சூழல், வரலாற்று விவரங்கள் போன்றவற்றைப் புரிந்துகொள்வதற்கான நமது திறனை மேம்படுத்தும்போது, வேத பகுதியின் முதல் வாசகர்களுக்கும் நமக்கும் வேத பகுதி எதைக் குறிக்கிறது என்பதைப் பற்றிய ஆவிக்குரிய நுண்ணறிவைப் பெற உதவுகிறது.
>
> – Dr. சைமன் வைபர்ட்

இடைக்காலம் முழுவதும், வேதாகமத்தின் கிட்டத்தட்ட ஒவ்வொரு முன்னணி வியாக்கியான அறிஞரும் அகஸ்டின் மற்றும் அக்வினாஸ் போன்ற முக்கியமான அறிவியல் அறிஞர்கள் உட்பட ஏதோ ஒரு வகையான தெய்வீக வாசிப்பை அல்லது லத்தீன் மொழியிலிருந்து தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட *லெக்டியோ டிவினா* என்பதை பயிற்சி செய்தனர்.

மொத்தத்தில், தெய்வீக வாசிப்பு நான்கு நன்கு அறியப்பட்ட படிகள் அல்லது இயக்கங்களில் பயிற்சி செய்யப்பட்டது: *லெக்டியோ* என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட வார்த்தை வேதாகம வாசிப்பையும்; *மெடிடாஷியோ* என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட வார்த்தை படித்தவற்றின் உள்ளடக்கத்தைப் பற்றி மௌனமாக சிந்தித்தலையும்; *ஒராட்டியோ* என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட வார்த்தை தேவன் ஞானோதயம் தர வேண்டும் என்று மனதார ஜெபம் செய்வதையும்; *கண்டேம்லெட்டியோ* என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட வார்த்தை ஒரு வேத பகுதியின் முக்கியத்துவத்தைப் பற்றி மிகவும் உள்ளுணர்வும், ஆழமான உணர்ச்சிபூர்வமான மற்றும் மாற்றியமைக்கும் நம்பிக்கைகளை தேவனுடைய ஆவி வழங்கும் என்று அமைதியாகக் காத்திருத்தலையும் குறிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சபை சீர்திருத்தத்தின் போது, ரோம திருச்சபை அனைத்து வகையான தவறான போதனைகளையும் நியாயப்படுத்த தெய்வீக வாசிப்பு நடைமுறையைப் பயன்படுத்தியது. திருச்சபை அதிகாரிகள் தங்கள் போதனைகள் தேவனிடமிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட நுண்ணறிவுகளிலிருந்து பெறப்பட்டவை என்று கூறினர், ஆனால் இந்த "நுண்ணறிவுகள்" உண்மையில் சில மிக முக்கியமான வழிகளில் வேதாகமத்தின் போதனைகளுக்கு முரணாக இருந்தன. இதற்கு பதிலாக, பெரும்பாலான புராட்டஸ்டன்ட் அறிஞர்கள் அறிவியல் வியாக்கியானவியலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். ஆனால் வேதத்தை பக்தியுடன் படிப்பதை அவர்கள் கைவிடவில்லை. மாறாக, பக்தித் தத்துவங்கள் வேதத்தின் சிறந்த புறநிலை பகுப்பாய்வுடன் இணைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

புராட்டஸ்டன்ட் வேத புலமையின் இந்த அம்சம் பரவலாக அங்கீகரிக்கப்படவில்லை, எனவே இது இரண்டு நன்கு அறியப்பட்ட பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட உதவும்: ஜான் கால்வின் மற்றும் ஜொனாதன் எட்வர்ட்ஸ்.

ஜான் கால்வின் ஆரம்பகால சீர்திருத்தத்தின் மிகவும் பகுத்தறிவு மற்றும் தர்க்கரீதியான வேதாகம வியாக்கியான அறிஞர் என்று அழைக்கப்படுகிறார். ஒரு வழக்கறிஞராகவும் மறுமலர்ச்சி மனிதநேயவாதியாகவும் அவர் பெற்ற பயிற்சி அவரை இந்த பாத்திரத்திற்கு நன்கு தயார்படுத்தியது. ஆனால் அவரது வர்ணனைகள் முழுவதிலும், அவர் அறிவியல் ரீதியாக மட்டுமல்லாமல் பக்தியுடைய வியாக்கியானவியலையும் தீவிரமாகப் பின்பற்றுவதைக் காண்கிறோம்.

ஒரு எடுத்துக்காட்டாக, அவர் தனது *ஆகாய் விளக்கவுரையில்,* பகுதி 2 இல் பின்வருமாறு எழுதினார்:

> நாம் மிகவும் பாதிக்கப்படும் படிக்கு தேவனுடைய மகிமை அவர் நேருக்கு நேர் நமக்கு அருகில் இருப்பது போல, அவருடைய வார்த்தையில் பிரகாசிக்கிறது.

வேதாகமத்தின் வியாக்கியானத்தை ஒரு தனித்துவமான, உருவமற்ற விஞ்ஞான நடவடிக்கையாக கருதுவதற்குப் பதிலாக, நாம் வேதவாக்கியங்களைப் படிக்கும்போது தேவன் நம்முடன் "நேருக்கு நேர்" இருப்பது போல "நாம் மிகவும் பாதிக்கப்பட வேண்டும்" என்று "தேவனுடைய மகிமை அவருடைய வார்த்தையில் பிரகாசிக்கிறது" என்று கால்வின் வலியுறுத்தினார். இந்த வசனம் குறிப்பிடுவது போல, கால்வின் தேவனுடைய பிரசன்னத்தைப் பற்றிய அனைத்தையும் நுகரக்கூடிய, தீவிரமான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உணர்ச்சிபூர்வமான மற்றும் பணிவான அனுபவமாக வேதாகமத்தைப் படிக்குமாறு தனது சீஷர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

1703 முதல் 1758 வரை வாழ்ந்த ஆரம்பகால அமெரிக்க இறையியலாளர் ஜொனாதன் எட்வர்ட்ஸ், வேதாகமத்தைப் பற்றிய தனது நுணுக்கமான பகுத்தறிவு மற்றும் தர்க்கரீதியான பகுப்பாய்வுகளை அடிக்கடி வெளிப்படுத்தினார். ஆனால் அவரது *தனிப்பட்ட விவரிப்பு* என்ற கட்டுரையிலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்கவும்:

> [1 தீமோத்தேயுவின்] வார்த்தைகளை நான் வாசித்தபோது, தெய்வீக மகிமையின் உணர்வு; ஒரு புதிய உணர்வு, நான் முன்பு அனுபவித்த எந்த விஷயத்திலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட உணர்வு என் ஆத்துமாவில் வந்தது. இந்த வார்த்தைகளைப் போல வேதாகமத்தின் எந்த வார்த்தைகளும் எனக்குத் தோன்றவில்லை. அந்த தேவனை நான் என்றென்றுமாக அனுபவிக்க முடிந்தால், அது எவ்வளவு சிறந்த ஜீவனாக இருக்கிறது என்றும், நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் எனக்குள் நினைத்தேன்!

வேதவாக்கியத்தை வாசிக்கும்போது எட்வர்ட்ஸ் ”தெய்வீகத்தின் மகிமையின் உணர்வில்” மகிழ்ச்சியடைந்தார் என்பதை இங்கே காண்கிறோம். தேவனுடைய ஆவியின் இந்த அனுபவம் மிகவும் வல்லமை வாய்ந்ததாக இருந்தது, எட்வர்ட்ஸ் ”அந்த தேவனை என்றென்றும் அனுபவிக்க விரும்பினார்!” எட்வர்ட்ஸ் அறிவொளி பகுத்தறிவுவாதத்தால் வலுவாக பாதிக்கப்பட்டதற்காக நன்கு அறியப்பட்டவர், மேலும் வேதாகம வியாக்கியானம் ஆழமான அறிவியல் பூர்வமானதாக இருக்க வேண்டும் என்று அவர் சரியாக நம்பினார். ஆனால் எட்வர்ட்ஸ் கூட வேதத்தைப் பற்றிய பகுத்தறிவு ரீதியான பிரதிபலிப்பில் திருப்தியடையவில்லை. வேதாகமம் தேவனுடைய வியத்தகு பிரசன்னத்தைப் பற்றிய ஆழமான உள்ளுணர்வுடன் வாசிக்கப்பட வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

நம் காலத்தில், வியாக்கியானவியலுக்கான பக்தியுடைய அணுகுமுறைகள் அறிவுசார் வேதாகம வியாக்கியானத்திலிருந்து கிட்டத்தட்ட மறைந்துவிட்டன. ரோம கத்தோலிக்க வியாக்கியான அறிஞர்களின் சூழ்ச்சிகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஆரம்பகால புராட்டஸ்டன்ட்கள் அறிவியல் வியாக்கியானவியலை நோக்கி நகர்ந்தாலும், இன்று பல வேதாகம அறிஞர்கள் பக்தியுடைய வியாக்கியானவியலை தங்கள் அறிவுத்திறனுக்குக் கீழாக கருதுகின்றனர். இந்த அணுகுமுறை வேதத்திலிருந்து நமக்குத் தேவையான அனைத்தையும் வழங்கும் என்பது போல, அவர்கள் கிட்டத்தட்ட

தங்கள் அறிவார்ந்த கவனம் முழுவதையும் கவனமான, பகுத்தறிவு வியாக்கியானங்களில் செலுத்துகிறார்கள். தீவிரமான ஜெபம், உபவாசம், தியானம் ஆகியவற்றின் மூலம் தேவனிடமிருந்து ஒளியைத் தேடுவது சுவிசேஷ புலமையிலிருந்து மறைந்துவிட்டது. ஆனால் முறையான, கல்வி வியாக்கியானத்தை அணுகும்போது அறிவியல் மற்றும் பக்தி வியாக்கியானம் இரண்டையும் பின்பற்றுவது முக்கியம். நாம் உச்சத்திற்குச் செல்லாமல் கவனமாக இருக்க வேண்டும், ஆனால் பல புராட்டஸ்டன்ட் வியாக்கியான அறிஞர்கள் கடந்த காலத்தில் இதைச் சிறப்பாகச் செய்துள்ளனர், மேலும் அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவது புத்திசாலித்தனமாக இருக்கும்.

பக்தி வியாக்கியானவியலின் வேதாகம மூலங்களையும், வேதாகம வியாக்கியானத்திற்கு அறிவியல் மற்றும் பக்திசார் அணுகுமுறைகளை இணைத்த இறையியலாளர்களின் சில வரலாற்று எடுத்துக்காட்டுகளையும் மனதில் கொண்டு, இந்த வகையான வியாக்கியானவியலின் முன்னுரிமைகளை சுருக்கமாகப் பார்ப்போம்.

## முன்னுரிமைகள்

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களில் பெரும்பாலானோர் பக்தி உணர்வோடு வேதவாக்கியங்களைப் படிக்கத் தொடங்குகிறார்கள். ஆனால் அவர்கள் வேதாகம வியாக்கியானத்தில் அதிக தேர்ச்சி பெறும்போது, பக்தியுடைய வியாக்கியானவியலின் முக்கியத்துவத்தை பெரும்பாலும் மறந்துவிடுகிறார்கள். ஆனால் வேதத்தின் விஞ்ஞான ரீதியான விளக்கம் பெரும்பாலும் மிகவும் அறிவார்ந்ததாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் இருப்பதால், ஒரு காலத்தில் கிறிஸ்துவுடன் நாம் நடப்பதற்கு முக்கியமான ஒன்றை நாம் மறந்துவிடுகிறோம். அதாவது அவருடைய வார்த்தையின் மூலம் நமக்குள் நடக்கிற தனிப்பட்ட மற்றும் வல்லமை வாய்ந்த மாற்றத்தை மறந்து விடுகிறோம். இந்த காரணத்திற்காக, வேதாகமத்திற்கான ஒரு பக்தி அணுகுமுறையானது மூன்று வியாக்கியான செயல்முறைகளையும் பின்பற்றும்போது நமக்கு இருக்கும் முன்னுரிமைகளை எவ்வாறு சரிசெய்ய வேண்டும் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அறிவியல் வியாக்கியான முன்னுரிமைகளைப் பார்த்ததைப் போலவே பக்தியுடைய வியாக்கியான முன்னுரிமைகளையும் ஆராய்வோம். முதலில், ஆயத்தத்திற்கான முன்னுரிமைகளை நாம் தீர்மானிப்போம். அடுத்து, பக்தியுடைய வியாக்கியான ஆய்வு செயல்முறையில் கவனம் செலுத்துவோம். இறுதியாக, இந்த வகை வியாக்கியானத்தின் நவீன பயன்பாடு குறித்து சிறிது சிந்திப்போம். ஆயத்தத்திற்கான முன்னுரிமைகளிலிருந்து தொடங்குவோம்.

## ஆயத்தம்

துரதிர்ஷ்டவசமாக, நாம் வேதாகமத்தைப் வாசிக்கும்போது, தேவனுடைய விசேஷ பிரசன்னத்தின் அனுபவத்தின் மீது நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்று கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் பலர் நம்புகிறார்கள். அது நடக்கிறது அல்லது நடக்காது. அதற்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள எந்த வழியும் இல்லை. ஆனால் யாக்கோபு 4:8-ல் இந்த தவறான கருத்தை யாக்கோபு பேசிய விதத்தைக் கவனிக்கவும்:

> தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் (யாக்கோபு 4:8).

“தேவனிடத்தில் சேருங்கள்” என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டிலிருந்து வருகிறது. உண்மையாக ஆராதிப்பவர்கள் கூடாரத்திலும் ஆலயத்திலும் தேவனுடைய விசேஷ பிரசன்னத்திற்கு ”அருகே வருவார்கள்”. நிச்சயமாக, தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறார், அவர் எப்போது வேண்டுமானாலும் வியத்தகு வழிகளில் தன்னை வெளிப்படுத்த முடியும். ஆனால் யாக்கோபின் வார்த்தைகள் மனிதனுடைய பொறுப்பு குறித்த வேதாகமத்தின் வலியுறுத்தலை பிரதிபலிக்கின்றன. தேவனுடைய விசேஷ பிரசன்னத்தை நாம் அனுபவிக்க விரும்பினால், நாம் அவரை நெருங்க வேண்டும். தேவன் நம்மிடம் நெருங்கி வருவதன் மூலம் பிரதிபலிப்பார்.

பொதுவாக, பக்திகரமான வியாக்கியானவியலுக்கான ஆயத்தம் என்பது பரிசுத்தப்படுத்துதலை அல்லது தேவனுக்கு பரிசுத்தமான பிரதிஷ்டை செய்தலை உள்ளடக்கியது. வேதவாக்கியங்கள் போதிப்பது போல, தேவனுடன் ஐக்கியமாவதற்கு இடையூறாக இருக்கும் எல்லாவற்றிலிருந்தும் நாம் விடுபட்டு, அதை மேம்படுத்தும் அனைத்தையும் பின்பற்ற வேண்டும். இந்த வகையான ஆயத்தம் அவை அனைத்தையும் குறிப்பிடுவதற்கு பல விஷயங்களை உள்ளடக்கியது என்பதைச் சொல்லத் தேவையில்லை, ஆனால் கருத்தியல், நடத்தை மற்றும் உணர்ச்சி ஆயத்தம் ஆகிய மூன்று பொதுவான வகைகளைப் பற்றி பேசுவதன் மூலம் அவற்றின் அகலத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

முதலாவதாக, கருத்தாக்க ஆயத்தம் மூலம் வேதாகமத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்கு நாம் ஆயத்தமாவோம். இதன் மூலம் தேவனுடைய உண்மையான வார்த்தையுடன் நமது நம்பிக்கைகளை இணங்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம் என்று அர்த்தப்படுத்துகிறோம். தேவன், மனித இனம் மற்றும் உலகம் பற்றிய தவறான கருத்துக்களை நம்புவது தேவனுடன் ஐக்கியமாவதற்கு தடைகளை ஏற்படுத்துகிறது. வேதாகம அறிஞர்கள் ஒப்பீட்டளவில் குறுகிய கருத்தாக்கங்களில் கவனம் செலுத்த முனைந்துள்ளனர் என்பதை நாம் பார்த்தோம். ஆனால் தேவனுடைய

ஆவியால் பரிசுத்தப்படுத்துவது நமது எண்ணங்கள் அனைத்தும் தேவனுடைய மனத்துடன் ஒத்துப்போக வேண்டும் என்ற ஏக்கத்தைக் கொண்டுவருகிறது, மேலும் இந்த ஆசை நாம் வேதவாக்கியங்களை வியாக்கியானம் செய்யும்போது அவரது பிரசன்னத்தில் நுழைவதற்கு நம்மைத் தயார்படுத்துகிறது.

இரண்டாவதாக, நடத்தை ஆயத்தத்தின் மூலம் வேதவசனங்களைப் படிக்கும்போது நாம் தேவனை நெருங்குகிறோம். வேதாகமத்தில், தேவனுடைய சித்தத்திற்கு முரணான காரியங்களைச் செய்வது தேவனுடைய சாதகமான பிரசன்னத்தை அனுபவிப்பதற்கான மிகப்பெரிய தடைகளில் ஒன்றாகும். பக்தியுள்ள வியாக்கியானவியலுக்கு ஆயத்தமாவதில் நமது தோல்விகளுக்காக மனந்திரும்புதல் மற்றும் தேவனுக்குப் பிரியமான வழிகளில் நடந்துகொள்வதற்கான உண்மையான விருப்பம் ஆகியவை அடங்கும்.

மூன்றாவதாக, உணர்ச்சிபூர்வமான ஆயத்தத்தின் மூலம் தேவனுடைய நெருக்கத்தைத் தேடுவதற்கு நாம் தயாராக வேண்டும். உணர்ச்சி ரீதியான ஆயத்தம் என்பது நமது அனைத்து மனப்பான்மைகளையும் உள்ளடக்கியது. அதாவது உணர்ச்சிகளைக் கடப்பது முதல் தேவன், மனிதர்கள் மற்றும் சிருஷ்டிப்பின் மற்ற பகுதிகளைப் பற்றிய நமது நீடித்த உணர்வுகள் வரை எல்லாவற்றையும் இது உள்ளடக்கியது. பெருமை, வெறுப்பு மற்றும் இருதயத்தின் கடினத்தன்மைக்கு எதிராக வேதம் அடிக்கடி எச்சரிக்கிறது. இந்த உணர்வுகளும் இதே போன்ற உணர்ச்சிகளும் தேவனுடைய விசேஷ பிரசன்னத்திற்குள் நுழைவதற்குத் தடைகளாக இருக்கின்றன. ஆனால் பணிவு, அன்பு, இருதயத்தின் மென்மை போன்றவை தேவனுடன் ஐக்கியமாவதற்கான வழியைத் திறக்கின்றன. இந்த காரணத்திற்காக, பக்திகரமான வியாக்கியானவியலுக்கான ஆயத்தம் நமது கருத்துக்கள் மற்றும் நடத்தைகளை மட்டுமல்லாமல், நமது உணர்ச்சிகளின் முழு வரம்பையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

> வேதத்தை புத்திசாலித்தனமாகவும் உண்மையாகவும் வியாக்கியானம் செய்வது என்பது மனம் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல. இது உண்மையில் இருதயம் சம்பந்தப்பட்ட விஷயம், மற்றும் முழு நபரின் விஷயமாகும். அதாவது - தேவனுடைய வார்த்தையை வியாக்கியானம் செய்வதற்கும் பின்னர் கற்பிப்பதற்கும் பொறுப்பு உள்ள எவருக்கும் இது ஒரு சவாலாகும் என்று நான் நினைக்கிறேன் - அதாவது நமது இருதயத்தின் நிலை, கிறிஸ்துவுடனான நமது உறவு, வேதத்தைப் பற்றிய நமது புரிதலின் செயல்திறனில் உண்மையில் தாக்கத்தை

> ஏற்படுத்துகிறது. அதனால்தான், நம்முடைய பாவங்களை அறிக்கையிடுவதிலும், ஒவ்வொரு நாளும் சுவிசேஷத்தைப் பற்றிக்கொண்டிருப்பதிலும் உண்மையுள்ளவர்களாக இருப்பது மிகவும் முக்கியம். நாம் ஆவிக்குரிய ரீதியாக அலையத் தொடங்கும்போது, குறிப்பாக வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளில் நாம் பாவத்தில் அலைந்தால், அது மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும். தேவனுடைய வார்த்தையை உண்மையாகப் புரிந்துகொள்ளும் நமது திறனில் இது எதிர்மறையான விளைவைக் கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அது குறிப்பாகச் செய்யும் ஒரு விஷயம் என்னவென்றால், வேதாகமத்தில் நமக்கு இருக்கும் மிகவும் வலுவான கட்டளைகளிலிருந்து நம்மை பின்வாங்கச் செய்கிறது, மேலும் அந்த கட்டளைகளிலிருந்து நாம் விலகிச் செல்ல முயற்சிப்பதால் அவற்றை அவற்றின் முழு நேர்மையுடன் வைத்திருப்பதில்லை. இது மிகவும் முக்கியமானது - நேர்மையான வியாக்கியானத்திற்கு இருதயத்தின் நிலை அவசியம்.
>
> – Dr. பிலிப் ரைகென்

ஆயத்தத்திற்கான இந்த முன்னுரிமைகளை மனதில் கொண்டு, பக்தியுடைய வியாக்கியானவியலில் மூல அர்த்தத்தை ஆராயும் இரண்டாவது மரபுவழி செயல்முறைக்கு நாம் திரும்ப வேண்டும்.

## ஆராய்ச்சி

வேதாகமத்தின் மூலப் பொருளைப் பற்றிய நமது ஆய்வை நம்மை தேவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவரும் வழிகளில் வடிவமைப்பதே பக்தியுடைய வியாக்கியானவியலாகும். பக்தியுடைய ஆராய்ச்சியில், தேவனுடைய அருகாமையைப் பற்றிய வேதாகம ஆசிரியர்களின் அனுபவத்தின் அடிப்படையில் அசல் அர்த்தத்தைப் பார்க்கிறோம், மேலும் அவர்கள் தங்கள் அசல் வாசகர்களையும் தேவனுக்கு நெருக்கமாக கொண்டு வர விரும்பினர். இதைச் செய்ய பல வழிகள் உள்ளன, ஆனால் எளிமைக்காக, விசாரணையின் கருத்தியல், நடத்தை மற்றும் உணர்ச்சி பரிமாணங்களின் அடிப்படையில் மீண்டும் பேசுவோம்.

முதலாவதாக, பக்தி வியாக்கியானவியலுக்கு கருத்தியல் ஆய்வு தேவைப்படுகிறது - அதாவது தேவனும் அவரது ஏவப்பட்ட எழுத்தாளர்களும்

தங்கள் அசல் வாசகர்களுடன் தொடர்பு கொள்ள விரும்பிய கருத்துகளில் கவனம் செலுத்தவும். நாம் பார்த்தபடி, பக்தியுடைய வியாக்கியானவியல் வேதத்தின் உண்மைகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட வேண்டும், இதனால் அது ஊகம் அல்லது பிழையில் இறங்காது. இந்த பணிக்காக அறிவியல் வியாக்கியானவியலானது நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆனால் பக்தியுடைய வியாக்கியானவியலில் பொதுவாகக் கேட்கப்படாத சில கருத்தியல் கேள்விகளைக் கேட்கிறோம். தேவனைப் பற்றிய ஆசிரியரின் அனுபவத்தை இந்த நூல் எவ்வாறு வெளிப்படுத்துகிறது? தேவனுடைய நெருக்கத்தை தனது வாசகர்கள் அனுபவிக்க ஆசிரியர் எவ்வாறு விரும்பினார் என்பதை இது எவ்வாறு குறிக்கிறது?

இரண்டாவதாக, பக்தியுடைய ஆராய்ச்சி வேதாகமத்தின் அசல் அர்த்தத்தின் நடத்தை பரிமாணங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். மனித நடத்தை தேவனுடைய விசேஷ பிரசன்னத்திற்கு வருவதற்கான நமது திறனை மேலும் அதிகரிக்கிறது அல்லது தடுக்கிறது என்று முன்பு சொன்னோம். இந்த காரணத்திற்காக, வேதாகம ஆசிரியர்கள் எழுதியபடி, தங்கள் சொந்த செயல்களும் தங்கள் வாசகர்களின் செயல்களும் தேவனுடைய அருகாமையைப் பற்றிய அவர்களின் அனுபவத்தை எவ்வாறு பாதித்தன என்பதையும் வெளிப்படுத்தினர்.

மூன்றாவதாக, பக்தி ஆய்வு என்பது தேவனுடைய அருகாமையுடன் தொடர்புடைய அசல் அர்த்தத்தின் உணர்ச்சி பரிமாணங்களையும் கொண்டு வர வேண்டும். அறிவியல் வியாக்கியானவியலானது பெரும்பாலும் இதைப் புறக்கணிக்கிறது என்றாலும், வேதாகம ஆசிரியர்கள் தங்கள் சொந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தினர் மற்றும் அவர்களின் அசல் வாசகர்களின் உணர்ச்சிகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முயன்றனர். வேதாகம எழுத்தாளர்கள் மற்றும் அவர்களின் வாசகர்களின் மகிழ்ச்சிகள், சந்தேகங்கள், துக்கங்கள் மற்றும் அச்சங்கள் ஒவ்வொரு திருப்பத்திலும் தோன்றும். நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, தேவனுடைய அருகாமையின் தீவிரமான அனுபவங்கள் உயர்ந்த உணர்ச்சிகளை உள்ளடக்குகின்றன. எனவே, வேதாகம நூல்கள் ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் வாசகர்களின் உணர்வுகளைப் பற்றி என்ன வெளிப்படுத்துகின்றன என்பதையும், அவை தேவனுடைய பிரசன்னத்தைப் பற்றிய அவர்களின் அனுபவங்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றன என்பதையும் நாம் எப்போதும் கவனிக்க வேண்டும்.

ஆயத்தம் மற்றும் ஆய்வின் முன்னுரிமைகளைத் தொட்ட பிறகு, பக்தியுடைய வியாக்கியானவியலில் பிரயோகத்தின் முன்னுரிமைகளையும் நாம் குறிப்பிட வேண்டும்.

## பிரயோகம்

நாம் தேவனுடைய சந்நிதியில் வேதவாக்கியங்களைப் படிக்கும்போது, தேவன் விரும்பியபடி தேவனுடைய வார்த்தையைப் பிரயோகிப்பதில் நாம் குறிப்பாக அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண மனிதர்கள் எழுதிய ஒரு உயிரற்ற பொருளாக வேதாகமத்தை நாம் கருதவில்லை. மாறாக, வேதவாக்கியங்களை இன்று நமக்காக வாழும் தேவனுடைய வார்த்தையாகக் கையாளுகிறோம். இதை நாம் எவ்வாறு நிறைவேற்றுகிறோம் என்பதைப் பற்றிய சிறந்த உணர்வைப் பெற நமக்கு உதவ, பிரயோகத்தின் கருத்தியல், நடத்தை மற்றும் உணர்ச்சி பரிமாணங்களைப் பற்றி மீண்டும் பேசுவோம்.

ஒரு கருத்தியல் மட்டத்தில், பக்தி பிரயோகமானது வேதவாக்கியங்கள் மூலம் தேவன் தன்னைப் பற்றிய நமது கருத்துக்கள், மனிதகுலம் மற்றும் சிருஷ்டிப்பின் பிற கருத்துக்களை எவ்வாறு பாதிக்கிறார் என்பதில் கவனம் செலுத்துகிறது. தீவிரமான ஜெபம் மற்றும் அவருடைய வார்த்தையின் தியானத்தின் மூலம் தேவனுடைய ஆவியின் வெளிச்சத்தை நாம் தேடும்போது, தேவனுடைய ஆவியானவர் அவரையும், மனிதகுலத்தையும் மற்றும் சிருஷ்டிப்பின் மற்ற பகுதிகளையும் பற்றிய நமது கருத்துக்களை உறுதிப்படுத்தி மேம்படுத்தி திருத்துகிறார் என்பதைக் காண்போம். இந்தத் திருத்தங்களை நாம் முழு இருதயத்தோடு ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய பிரசன்னத்தின் ஆசீர்வாதத்தில் நாம் மேலும் ஈர்க்கப்படுவதைக் காண்போம்.

ஒரு நடத்தை மட்டத்தில், பக்தி பிரயோகமானது நாம் வேதவாக்கியங்களைப் பற்றி சிந்திக்கும்போது தேவனுடைய பிரசன்னத்தால் நமது நடத்தைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதில் கவனம் செலுத்துகிறது.

நாம் வேதாகமத்திற்கு வரும்போது, நாம் செய்த அனைத்தையும் தாழ்மையுடன் வெளிப்படுத்த வேண்டும். நாம் ஜெபத்தோடு தேவனை நெருங்கும்போது, தேவனுக்கு எதிர்காலத்தில் செய்யும் சேவைக்காக அவருடைய ஆவியானவர் நம்முடைய செயல்களை உறுதிப்படுத்தி மேம்படுத்துகிறார். இதற்கும் அப்பால், ஆவியானவரை நனவாகச் சார்ந்து வேதவசனத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, தேவனுக்குப் பிரியமான செயல்களுக்குத் திரும்புவதற்கு அவர் நம்மைத் திருத்தி நமக்கு வல்லமையளிக்கிறார் என்பதைக் காண்கிறோம்.

இறுதியாக, ஒரு உணர்ச்சி மட்டத்தில், வேதவசனத்தின் பக்தி பிரயோகம், தேவனுடைய விசேஷ பிரசன்னத்தில் வேதவாக்கியங்களைப் படிப்பதன் மூலம் நமது மனப்பான்மைகளும் உணர்வுகளும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்பதைக் குறிக்கிறது. தேவனுடைய ஆவியானவர் தம்முடைய ஞானத்தில் வருத்தத்தையும் துக்கத்தையும் துயரத்தையும் பொருத்தமான தருணத்தில் கொண்டுவருகிறார். தேவ ஆவியானவர் நம் இருதயங்களை மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் அன்பால் நிரப்புகிறார். வேதாகமத்தை நாம் தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையாக அணுகும்போது, அவர் மீதும், மற்றவர்கள் மீதும், சிருஷ்டிப்பின் மற்ற பகுதியினர் மீதும் நமக்குள்ள உணர்ச்சிகள் அமைதியாக நம் மீது வரக்கூடும். அல்லது, ஆவியானவரின் சித்தப்படி, நாம் தேவனுடைய பிரசன்னத்தால் மூழ்கும்படிக்கு அவை நம் இருதயங்களையும் நிரப்பலாம். எது எப்படியிருந்தாலும், தேவனுடைய நெருக்கத்தின் வெளிச்சத்தில் வேதாகமத்தை எவ்வாறு வியாக்கியானம் செய்வது என்பதை நாம் கற்றுக்கொள்ளும்போது, நம்முடைய கருத்துக்கள் மற்றும் நடத்தைகளில் மட்டுமல்லாமல், நமது உணர்ச்சிகளின் ஆழத்திலும் வேதாகமங்கள் உயிர்ப்புடன் வந்து நம்மை மாற்றுவதைக் காண்போம்.

> நாம் வேதத்தை வாசிக்கும்போது, வேதம் வெறுமனே நம் சிந்தனையை மாற்றுவது மட்டும் அதன் நோக்கமல்ல. அது நம் வாழ்க்கையை மாற்றச் சொல்கிறது. எனவே வேதத்தைப் படிக்க மக்களை ஊக்குவிக்கும்போது நான் பயன்படுத்த விரும்பும் விஷயங்களில் ஒன்று, வேதாகமத்தை மூன்று பகுதிகளாகப் பிரயோகிப்பதாகும், அவையாவன: சிந்தி, உணர் மற்றும் செய். நாம் வேதாகமத்தை அந்த ஒரு இடமான நாம் எப்படி நினைக்கிறோம் என்பதில் மட்டுமே பிரயோகிக்கும் போது தான் அது பகுத்தறிவு வாதம் ஆகிறது. ஆனால் நாம் முழு மனதோடும் அவரை நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், எனவே நாம் சிந்திப்பது தேவனுடைய பார்வையில் முக்கியமாகிறது. ஆனால் நாம் எப்படி உணர்கிறோம் என்பதும் தேவனுக்கு முக்கியம் ஆகும் - அதாவது நமது உணர்ச்சிகரமான வாழ்க்கை மற்றும் நாள் முழுவதும் நமது மனநிலை ஆகியவையாகும். நம் உணர்வுகள் என்ன என்பது தேவனுக்கு முக்கியமாகும். உணர்வுகள் தேவனுக்கு உண்மையாக இருக்க முடியும், அல்லது உணர்வுகள் தேவனுக்கு உண்மையாக இருக்க முடியாது. நடுநிலை உணர்வுகள் என்று எதுவும் இல்லை. ஆனால் ”செய்” என்கிற அம்சமும் உள்ளது. நாம் வேதாகமத்தைப் பிரயோகிக்கும்போது, அது நம் உணர்ச்சிகளை எவ்வாறு பாதிக்கிறது அல்லது நம் மனதை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றி மட்டுமல்லாமல், அது நம் செயல்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றியும்

> சிந்திக்க தேவன் விரும்புகிறார். எனவே, சிந்தி, உணர் மற்றும் செய் என்கிற அந்த கட்டத்தை நாம் பயன்படுத்தினால் வேதத்தைப் பற்றி நாம் எப்படி நினைக்கிறோம் என்பதற்கு அது உண்மையில் ஒரு சமநிலையை வழங்குகிறது.
>
> – Dr. மைக்கேல் ஜே. க்ருகர்

# முடிவுரை

வேதாகம வியாக்கியானவியலின் இந்த அறிமுகத்தில், மூன்று முக்கிய கருத்துகளில் கவனம் செலுத்தியுள்ளோம். முதலாவதாக, இந்த விஷயத்தில் நம்மை திசை திருப்புவதற்குத் தேவையான சில அடிப்படை சொற்களை ஆராய்ந்தோம். இரண்டாவதாக, அவற்றின் கடினத்தன்மை மற்றும் அவற்றின் தர்க்கரீதியான நிலைத்தன்மைக்கு அறிவியல் வியாக்கியானவியல் முக்கியமானது என்பதை நாம் கண்டோம். மூன்றாவதாக, தேவனுடைய பிரசன்னத்தில் வேதாகமத்தைப் படிப்பது என்கிற பக்தியுடைய வியாக்கியானவியல் அறிவியல் வியாக்கியானவியலுக்கு ஒரு முக்கியமான எதிர் சமநிலை என்பதை நாம் கண்டோம்.

வேதாகமத்தை வியாக்கியானம் செய்வது பற்றி மேலும் கற்றுக்கொள்வது தேவனிடமிருந்து அனைத்து வகையான புதிய நுண்ணறிவுகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் வழியைத் திறக்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் நாம் நம்பும் அனைத்திற்கும், நாம் செய்யும் எல்லாவற்றிற்கும், தேவனுடைய உண்மையுள்ள மக்களாக நாம் உணரும் அனைத்திற்கும் தரநிலைகளை அமைக்கின்றன. வரவிருக்கும் பாடங்களில் இன்னும் பல விபரங்களைப் பார்க்கும்போது, அறிவியல் மற்றும் பக்தியுடைய வியாக்கியானவியல்களுக்கு நம்மை அர்ப்பணிப்பது எவ்வளவு அவசியம் என்பதைப் பார்ப்போம். நம்மைப் போலவே, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்திலும் தேவனுக்கு நாம் செய்யும் உண்மையான சேவையின் புதிய பாதைகளைக் கண்டுபிடிப்போம்.